# ★ மிஞ்சுவது பொருளா புகழ்மாலையா? ★

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.   MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 | சென்னை (21—10—49) ❁ வெளியூர் (22—10—49) [ இதழ் 71

## வறுமைநிலை காட்டுகிறார்: உறவுநிலை வேண்டுகின்றனர்

## அவர்கள் கொடுத்தல்ல - எரித்தே பழக்கப்பட்டவர்கள்!

### பண்டிதர் மொழி அவர்கள் செவி ஏறுமா?

"இந்தியாவின் இக்கால உணவு தொல்லைகளைத் தீர்க்கவேண்டி, அமெரிக்காவின் உபரிகோதுமையைப்பெற இந்திய சர்க்கார் விரும்புகிறது. எங்கள் சக்திக்கேற்ற விலையில் உணவு வேண்டும். கோதுமையின் விலையைப் பொறுத்தே மற்றப் பண்டங்களின் விலைகள் உள்ளன. இந்தியாவில் விலைவாசிகளைக் குறைப்பதற்காகக் கோதுமை இருப்பை அதிகமாக்க விரும்புகிறோம்.

என்று, அமெரிக்கரின் 'அன்புக்கும் ஆசைக்கும்' பாத்திரமாகி, அமெரிக்காவில 'பவனி' வந்துகொண்டிருக்கும் பண்டித நேரு, வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களின் விருந்துண்ணும்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் உடனடித் தேவை உணவு. அந்தத் தேவையை விருந்துண்ணும் போது மறந்துவிடாமல், அமெரிக்கரிடம் உணர்த்தினாரே பண்டிதர். அதுவரையில் மகிழ்ச்சி! பாராட்டத்தக்கதுதான்!

உணவு கொடுத்து உதவுங்கள் என்று, அமெரிக்கர்கள் தமக்குத் தாமே வைத்திருக்கும் உரிய பங்கிலிருந்தல்ல, தோழர் நேரு கேட்பது, உபரியாகக் குவிந்து கிடக்கும் கோதுமையையே கேட்கிறார். அதுவும் இலவசமாகத் தரச்சொல்லிக்கூட அல்ல, "எங்களின் சக்திக்கேற்ற விலையில்" கொடுத்துதவுங்கள்' என்றுதான் கேட்டுள்ளார். இரங்கத்தக்க நிலையிலிருந்துதான் பண்டித நேரு கேட்கிறார்; என்றாலும் அமெரிக்க 'வல்லூரின்' மனம் இரங்குமா?

பண்டித நேருவின் குரல், வறுமை நிலையை எடுத்துக்காட்டுவதாகத்தான் அமைந்துள்ளது, எனினும் அமெரிக்காவின் மனம் அது கண்டு அசையுமா?

பள்ளிச் சிறுமியின் கேள்வி ஒன்றிற்குப் பதில் கூறும் முறையில், இந்தியாவில், பெரிய பிரச்சினையாக விளங்குவது 'வறுமை' என்றுதான் தோழர் நேரு உணர்த்தியுள்ளார் வறுமை நிலையை உள்ளத்திலே ஏந்திச்சென்று, வளமான நாட்டவரிடம் காட்டுவோம், அதுபார்த்து மனமிரங்கி, ஏதாவது அவர்கள் செய்யட்டும் என்று கருதிதான் நேரு சென்றிருப்பார். எனக் கருதுகிறோம்.

நேரு வாழுமிடம் வறுமையில் மூழ்கிக் கிடக்கிறது; ஆனால் நேரு சென்றுள்ள இடம் வளம் மிகுந்தது! இங்கே பசிக்கொடுமை பட்டினிச்சாவை உண்டாக்குகிறது; அங்கே மிதமிஞ்சிய உணவு தீக்கிரையாக்கப்படுகிறது! குடிசைகள் நிறைந்த நாட்டிலிருந்து, கூடகோபுரங்கள் நிறைந்த நாட்டிற்குச் சென்றுள்ள நேரு, தம் நாட்டுத் துன்பம் துடைக்க, அங்கு …வம் கிடைக்காதென்று எண்ணுவது இயற்கைதானே! அப்படியேதான் அவரும் எண்ணியுள்ளார்!

ஆனால் நேருவின் துன்ப நிலையைக் காண மறந்து, நேருவின் திறனைப் புகழ்வதிலே, அமெரிக்கா, தன் காலத்தையும், கண்ணையும், கருத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவுக்கு உள்ள கவலையெல்லாம், நேருவின் நாட்டிலே உள்ள துன்பநிலை துடைக்கப்படத்தான் அல்லவா என்பதல்ல, நேருவின் நாடு தன் பக்கம் இருக்கிறதா இல்லையா என்பதைக்கண்டறிவதுதான்.

தோழர் நேருவின் நாடு, தன் பக்கந்தான் இருக்கிறது என்று அகில உலகத்திற்கும் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் அமெரிக்காவிற்கு ஏற்பட்டுவிட்டது. ஆகவேதான், நேருவுக்கு 'ராஜோபசாரணை'கள் நடைபெறுகின்றன அமெரிக்காவில்! அதற்கேற்றாற்போல, நேருவும் தம் மகிழ்ச்சியை—அவர்கள் மகிழ்ச்சியோடு கூட்டுக் காட்டும் சந்தர்ப்பங்கள்தான் அதிகம் காணப்படுகின்றனவேயல்லாமல், துன்பநிலையைவெளிப்படுத்தும் வாய்ப்பு மிகமிகக் குறைவு—நிருபர்கள் கூட்டம் போன்ற ஒன்றிரண்டுதான்.

இந்தியாவுக்குக் கொடுப்பதில் இருக்கும் நோக்கத்தைவிட, இந்தியாவிடம் எதிர்பார்க்கும் தன்மை அமெரிக்காவிடம் அதிகம் இருக்கிறது என்பது, பள்ளிச் சிறுவனின் கேள்வி ஒன்றே போதுமானதாகும். "ரஷ்யா படையெடுத்தால், இந்தியா அமெரிக்காவோடு சேர்ந்து போரிடுமா" என்று அந்தச்சிறுவன் கேட்கிறான் என்றால், பொதுவாக அமெரிக்கர்கள் எல்லோரிடமும் என்ன கருத்து ஊறிப்போயிருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம்.

இந்தியாவிற்கு, என்ன—எவ்வளவு—எப்படி கொடுக்கிறார்கள் என்பதைவிட, இந்தியாவிடம் எதிர்பார்க்கும் நட்பு-உறவு-ஒத்துழைப்புஏராளம்! ஆகவேதான் அமெரிக்கர்களின் சொற்களிலே 'சாகசம்' மிகுதியாகக் கலந்திருக்கிறது.

உணவை எரித்துப் பழக்கப்பட்டவர்கள் அவர்கள்; கொடுத்துப் பழக்கப்பட்டவர்களல்லர். அவர்களிடம் உணவு எதிர்பார்க்கிறார் நேரு! அவர்கள் புகழ்மாலை தொடுக்கிறார்கள்! தோழர் நேரு இந்தியா வந்து சேரும்போதுதான் தெரியும், அவரோடு வருவது உணவுப் பொருளா அல்லது புகழ்மாலை மட்டுந்தானா என்பது!

## அயலார் வாழ திராவிடம் சுரண்டப்படவேண்டுமா?

## கருணை காட்டும் முறை இதுதானா?

### பம்பாய் காட்டும் வழி சென்னைக்குப் புலப்படுமா?

சென்னை மாநிலத்தில் குடியேறியுள்ள அகதிகள் அத்தனைபேரும் இங்கேயே தங்கியிருக்க வசதி செய்வதென்று சென்னை அரசியலார் முடிவு செய்திருக்கின்றனர். இதன்படி 4000 அகதிகள் குடியிருக்க வேண்டிய வசதிகளைச் செய்து தருவதென்று முடிவாகியிருக்கிறது.

அகதிகள் என்ற பெயரில், இங்ஙனம் ஆயிரக்கணக்கான அயலாரை இங்கு வாழவைக்க அரசியலார் செய்துள்ள இம்முயற்சியால், திராவிட மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே திராவிட நாட்டின் பொருளாதாரம் வடவர்களால் சுரண்டப்பட்டு, அதன் காரணமாக திராவிடம் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. "யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்ற மனப்பான்மையோடு இந்நாட்டில் குடி புகுந்த அந்நியரை யெல்லாம் வாழவைத்துவிட்டுத் தாம் நாடோடிகளாய், மலேயா, சிங்கப்பூர், பினாங்கு, இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்குக் கூலிகளாய்ச் சென்று, தமது குருதியை வியர்வையாகச் சிந்தி, வேதனைபட்டு உழலுகின்றனர் திராவிடர். இந்தப் பரிதாப நிலைமைக்குப் பரிகாரம் தேடுவாரில்லை. இந்நிலையிலே இங்கு 4000 அகதிகளின் நிரந்தர வாழ்வுக்கு வழிகோலுகின்றது அரசாங்கம் என்றால், இது எத்துணை வருந்தத்தக்கச் செய்தி பாருங்கள்!

அகதிகள் இங்கு அழைக்கப்படும் நிலை ஏற்பட்டபோது அறிஞர் பலர் கண்டித்தனர். அதற்குச் செவி சாய்க்காமல் மேலும் மேலும் அகதிகளுக்கு இடந்தந்துவிட்டு, இன்று அந்த அகதிக்கூட்டத்துக்கு அதிகப்படியான சலுகைகளும் அளிக்கத் துணிந்துவிட்டனர். காரணம் கேட்டால், "இதுகருணையின் பாற்பட்டது" என்று கூறுவர். ஆம், இருக்கட்டும்; ஆனால் கருணை காட்டும் முறை இதுதானா? ஆரியர்களுக்கும், மார்வாரிகளுக்கும் திராவிடர் கருணை காட்டி கண்ட பலன் என்னவாயிற்று? "எங்கள் நாட்டை எங்களுக்குக் கொடு" என்று அவர்களிடமே இன்றுநாம்பிச்சைக்கேட்கவேண்டிய நிலைமைக்கன்றோவந்துவிட்டோம்.

சரி, இந்த அகதிக் கூட்டத்திற்கு ஆதரவு தரும் முறை இத்துடனாவது முற்றுப் பெறுமா என்று பார்த்தால், அதுவும் ஐயப்பாடாகவேயிருக்கிறது. வடநாட்டில் அகதிகள் கூட்டம் பெருகியுள்ளது. பெருகியுள்ள கூட்டத்தைப் பல்வேறு மாகாணங்களுக்கு அனுப்ப, மத்திய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அத்திட்டப்படி பார்த்தால், வடக்கேயிருந்து அகதிகள் தெற்குநோக்கித்தான் வரவேண்டியவர்களாக இருக்கின்றனரே யன்றி, மேலும் வடக்கு நோக்கிச் செல்ல வழியில்லை. ஏனெனில், அங்கெல்லாம் இடமில்லையாம். பம்பாய் அரசாங்கம் "இனி, மேற்கொண்டு அகதிகளை ஏற்றுக்கொள்ள எங்களால் முடியாது" என்று திட்டமாகத் தெரிவித்துவிட்டது. எஞ்சியுள்ள மாகாணம் சென்னை மாகாணம் ஒன்றுதான். ஏமாந்த மாகாணமும் இதுதான். எனவே, மேற்கொண்டு அகதிகள் இங்கு இறக்குமதிசெய்யப்படுவார்களாயின் அதில் ஆச்சர்யமில்லை.

இந்நிலையில், சென்னை அரசாங்கம் செய்யப்போவது என்ன என்பதுதான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம். சென்னை அரசாங்கம் உண்மையிலேயே இம் மாகாண மக்களின் நலத்திலே அக்கரைகொண்டதாயின், அகதிகள் குடியேற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும். இதனை நாம் சொல்லி அவர்கள் ஏற்றுக்கொள்வதா என்ற எண்ணம் இருக்குமானால், பம்பாயைப் பார்த்தேனும் பாடம் கற்றுக்கொள்ளட்டும்.

### பெரிய பிரச்சினை

அமெரிக்கப் பள்ளியொன்றில், பண்டித நேரு சிறு பையன்களோடு உரையாடிக்கொண்டிருக்கும்போது, ஒரு சிறுமி "இந்தியாவில் உள்ள பெரும் பிரச்சினை என்ன?" என்று கேட்டாளாம். அதற்குத் தோழர் நேரு "வறுமை, எங்கள் மக்களுக்குச் சாப்பாடு" என்று பதிலிறுத்தாராம்.

## தட்டிக் கொடுக்கிறார்!

திராவிட நாட்டில் இந்தி மொழிக்கு பலத்த எதிர்ப்பு இருப்பதை அறிந்த சென்னை சர்க்கார், இந்தியைப் பாப்ப பக்குவமான முறைகளைக் கையாள ஆரம்பித்திருக்கின்றனர். சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தாமல் சாகசத்தின் மூலம் சரிக்கட்டப்பார்க்கின்றனர். கசப்பான பண்டத்துக்கு இனிப்பான மேல் பூச்சு பூசுகிறார்கள். அண்மையில தபால் சிப்பந்திகள் கூட்டமொன்றில் பேசிய அமைச்சர் சீதாராம ரெட்டியார்,

"பல பாஷைகளையும் படித்துப் பாண்டித்யம் பெறுவதில் தென்னிந்தியர்கள் நிபுணர்கள். அவர்கள் இந்தியை எளிதில் கற்றுக்கொள்ளலாம். எதிர்காலத்தில் தென்னிந்தியர்கள் முன்னணியில் நிற்க வேண்டுமானால் இந்தி கற்றுக் கொள்வது முற்றிலும் அவசியம். சாக்கார் ஊழியர்கள் அனுபவம் உள்ளவர்கள் என்பதோடு நல்ல ஞானமும் உடையவர்கள். ஆகலால் இந்தியில் சுலபத்தில் வல்லவர்களாக முடியும்"

என்று பேசியிருக்கிறார். இவ்வனம் தட்டிக் கொடுத்து இந்திக்கு ஆதரவு தேடுகிறார் அமைச்சர்!

## சரியான கேள்வி!

இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள் நியூயார்க் நகரப் பள்ளிக்கூடம் ஒன்றைப் பார்வையிடச் சென்றிருந்தபோது, அப்பள்ளிக்கூட மாணவர்கள் சிலர் நேருவை பல கேள்விகள் கேட்டனர். அவற்றுள் "உங்கள் மக்கள் இன்னும் காந்தியின் போதனைகளைப் பின்பற்றுகின்றனரா?" என்பதும் ஒன்று எப்படிக் கேள்வி! அமெரிக்கச் சிறுவர்கள் சொல்லி வைத்தாற்போல் இத்தகைய கேள்வியைக் கேட்டுபண்டிதரை சிந்திக்க வைத்துவிட்டனர். இந்த நாட்டில காந்தீயம் எந்த அளவுக்குப் பின்பற்றப்படுகிறது என்பதுநம்மைவிடப் பன்மடங்கு அதிகமாக அறிந்திருப்பாரல்லவா பண்டிதர்? எனவே ஒருவாறு நிலைமையைச் சமாளிக்க "காந்தியின் போதனைகளை அப்படியே எல்லோரும் பின்பற்றுகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. அவரை அவர்கள் பூஜிக்கிறார்கள்." என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டார். ஆம், பாலர்கள் கேட்ட வினாவும் அதற்குப் பண்டிதர் தந்த பதிலும் சரியானவையே. இங்கு காந்தியாரைப் பின்பற்றுவோரைவிட ஆண்டுதோறும் காந்தி பஜனை நடத்துவோர்தானே அதிகம்!

மாலை மணி

சென்னை 21—10—49 வெள்ளிக்கிழமை

# சர்க்கரையோ சர்க்கரை!

'சர்க்கரையோ சர்க்கரை' என்ற ஒலி எங்கிருந்தாவது எழும்பாசா என்ற ஏக்கப் பார்வையோடு, மக்கள் தெருத் தெருவாகக் கடைகள்தோறும் அலைந்து திரிந்து அவதிப்பட்டு வருகின்றனர், சென்ற சில நாட்களாக.

அப்படிச் சர்க்கரை எங்கேனும் கிடைக்கிறது என்று அறிகுறி தென்பட்டால், அடைகாக்கும் தேனீக்கள் போல மொய்த்து நின்று, இறுதியில், சர்க்கரையின் மணத்தை முகர்ந்து பார்த்துவிட்டு வெறுங்கையோடு வீடு திரும்புகிற நிலையில்தான், ஏராளமான மக்கள் தவிக்க விடப்படுகின்றனர். சிறிதளவு சர்க்கரை கிடைத்தாலும் போதும் என்ற எண்ணத்தில், பாண்டம் ஏந்திய கையோடு, வேகும் வெய்யலிலே, சிற்றெறும்பின் சில்லொழுக்குப் போல, ஒரே வரிசைபட கோர்வையாக நின்று பார்க்கிறார்கள். என்றாலும், பலர் ஏமாற வேண்டி ஏற்பட்டுவிடுகிறது. இத்தகைய பரிதாபகரமான காட்சிகள் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகர்களில் மிகவாகவும், மிகக் கஷ்டத்துடனும் காணப்படுகின்றன.

ஆனால், சர்க்கரை அகப்படாமலேயே போய்விடுகிறதா என்றால், அதுவும் இல்லை, அகப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது; ஆனால் அதிக விலையில், வீசைச்சர்க்கரை ரூ. 2-8-0 என்றும், ரூ. 3-0-0 என்றும் விற்க கள்ளச் சந்தையைக் கூட்டி வைத்திருக்கும் பதுக்கல்காரர்கள் அங்கங்கே இருக்கத்தான் செய்கின்றனர். 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்' என்ற மனப்பான்மையில், இது சமயம் தவறினால் மறு சமயம் வாய்ப்பது அரிது என்ற முறையில், அதிக விலை வைத்து விற்றுத், தம் கொடும் பெரும் வயிற்றை நிரப்பிக்கொள்ள பதுக்கல்காரர்கள் முயன்று, கள்ளச் சந்தையைக் கூட்டுகிறார்கள்.

சர்க்கரை அகப்படாமல் அவதியுற்றுத் திரும்பும் 'சர்க்கரையற்றப் பட்டாளம்', இப்படிப்பட்டப் பதுக்கல் காரர்களைக் காண நேரிட்டுவிட்டால், அவதி ஆத்திரமாக மாற, கிடங்குகளில் புகவும், புகுந்து கொள்ளையடிக்கவும் செய்கின்றனர். பின்பு ஆத்திரப் பட்டாளத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைக் குண்டு வீசலும் நடத்தப்படுகின்றன, போலீசாரால். இம்மாதிரிச் சம்பவங்கள் பம்பாயிலும், கல்கத்தாவிலும் தண்ணீர்ப் பட்டபாடாக இருக்கின்றன.

ஆத்திரப் பட்டாளத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யத்தான் அரசாங்கம் அறிந்திருக்கிறதேயல்லாமல், அந்தப் பட்டாளம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கும், 'பதுக்கும் பண பதுமை'களிடம் அண்டுவதில்லை; அவசியமில்லை என்று எண்ணியோ அல்லது முடியாது என்று கருதியோ, அறியக் கூடவில்லை!

அரசாங்கத்தின் திட்டமும், அதனை ஆணை செலுத்துவோரின் திறனும் ஏற்றப்படி அமைந்திராததே இப்படிப்பட்ட அவதியுறும் நிலைகள் மக்கள் அரும்ப வழி ஏற்படுகின்றன.

பாக்கிஸ்தானிலே ஏற்படாத சர்க்கரைத் தட்டுப்பாடு இந்திய யூனியனில் ஏற்பட்டிருக்கிறது என்றால், வேறு என்ன காரணமாக இருக்க முடியும், ஆட்சித் திறமைக் குறைவைத் தவிர. வெளியுலகில் சர்க்கரைத் தட்டுப்பாடில்லை; இங்கே தட்டுப்பாடு கழுத்தை நெறிக்கிறது! இந்த விசித்திர நிலை இங்கு மட்டும் ஏற்படுவானேன்? இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்படாமல், முன்னமேயே ஆவன செய்து பார்த்துக் கொள்ள வேண்டியதல்லவா சிறந்த ஆட்சியாளரின் கடமையாக இருக்க வேண்டும். ஏதோ காரணம் பற்றி, வெளியுலகத்திலிருந்து வராமற் போய்விட்டாலோ, அல்லது உள்நாட்டு உற்பத்திக் குறைந்து போய்விட்டாலோ இவற்றை முன்னரே அறிந்து, இருக்கும் அளவை எல்லோர்க்கும் கிடைக்கும்படியாகச் செய்ய, ஏற்ற திட்டத்தையல்லவா அரசாங்கம் வகுக்க வேண்டும்? வருமுன் அறியும் வாய்ப்பு, அரசாங்கத்திடத்துதானே இருக்கிறது! வருமுன் அறிந்து, பதுக்கல்காரர்களுக்குப் பதுக்கிவைக்க இடைவெளி கொடுக்காமலிருந்திருந்தால், இந்த அளவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்காது அல்லவா?

அதுவும் தீபாவலி மூட நம்பிக்கைப் பண்டிகையில், இனிப்புப் பண்டங்களைத் தேவைக்கு மேல் செய்து, அவசியமற்ற முறையில் செலவழிக்கும் பண்பு ஏற்பட்டுவிட்டதால், இப்பொழுது சர்க்கரை மிகமிகத் தேவை என்று சொல்லும்படியான நெருக்கடி நிலைமை உண்டாகிவிட்டது. இத்தகு நிலைகளை முன்பே அறிந்திருக்க வேண்டுமே, நாட்டின் நலனில் நாட்டமுள்ள அரசாங்கம்!

ஆட்சியாளரின்திறமையும், அதிகாரிகளின் போக்கும் சரியில்லை என்பது ஒருபுறமிருந்தாலும், இம்மாதிரி நிலைமைகளை வளர விடாமல் பார்த்துக்கொள்ளும் மனப் பண்பு மக்களிடத்தில், இத்துணைக்கண்டத்தில், இன்னும் மலரவில்லை என்றே சொல்ல வேண்டும். இங்கிலாந்தில் போர்க்காலத்தில், சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்பட்ட ஒரு சமயம், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சர்க்கரை வைத்திருப்போர், பொது மக்கள் நலன் கருதிக், கொண்டுவந்து கடையில் கொடுத்துவிடுக என்று கேட்டுக் கொண்டபோது, 'கியூ' வரிசையில் நின்று, அந்நாட்டு மக்கள் திருப்பிக்கொடுத்தனர் என்று அறிவிக்கப்படுகிறோம், அந்தப் பொதுப் பண்பு இங்கு அரும்பவிடாத காரணத்தால்தான், சர்க்கரையைப் பதுக்கும் குணமும் இருக்கிறது, முறையல்லாத முறையில் சர்க்கரையைப் பெற்றுக்கொள்ளும் பண்பும் வளர்ந்திருக்கிறது, நாட்டின் பொது நலனைக் கவனிக்க மறுத்து. கள்ளச் சந்தையினருக்கும், கடும் விலை விற்போருக்கும், பதுக்கல் கொள்கைக்காரர்களுக்கும் சமுதாயத்தில் இடமளிக்காத வகையில், சமுதாயத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொது மனப்பண்பு வளர வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும்!

'சர்க்கரையோ சர்க்கரை' என்ற கூவலைக்காணாது, 'சர்க்கரை இருக்கா சர்க்கரை' என்று கேட்டலையும்படியான நிலைமை ஏற்படாமல் இருக்க, நிலைமையைச் சரிவர அறிந்துகொள்ளும் உணர்வும், அதற்கேற்ப திட்டம் தீட்டும் திறனும், அதனால் ஏற்படும் விளைவைச் சமாளிக்கும் உறுதிப்பாடும் அரசாங்கத்திடம் இருந்திருக்க வேண்டும்!

சர்க்கரையோ சர்க்கரை-வாய்தான் ஊறுகிறது!

## எதையும் செய்ய அதிகாரம் உண்டு!

சோஷலிஸ்டுக கட்சியைச் சேர்ந்த தமிழ் வார வெளியீடான "ஜனதா" அச்சியற்றுப்பட்டுவந்த "ஜனதா பிரஸ்" ரூ. 1000 ஜாமீன் தொகையாகக சட்டவேண்டும, என்று வெளியிட்ட உத்தரவைசென்னை அரசாங்கம, நிராகரித்துவிட்டது. ஜாமீன் தொகை சேடக வேண்டும என்று முதல வாரததில் தோன்றிறறு போலும, அது அவசியமில்லை என்று அடுதத வாரததில அரசாஙகததிறகுப் புலபபட்டதுபோலும்! எதையும் செய்யததான் அதிகாரம இருககிறதே!

## சக்கிலிக்குச் சிறைக்க மறுப்பா?

### ஐந்தே ரூபாய் அரசாங்கத்துக்குக் கொடு

சக்கிலி வேலைசெய்யும் ஒருவனுக்குத் தலைசிறைக்க மறுத்துவிட்ட உடுப்பியைச சேர்ந்த முடியலங்காரக் கடை ஒன்றின் சொந்தக்காரர்களான அண்ணன்-தம்பி இருவர்க்கு, தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் நீதிபதி அபராதம விதித்தார். மக்களிடையே உயர்வு தாழ்வு பேதத்தையும், சாதி இறுமாப்பையும் காட்டும் வழக்கம் நாட்டைவிட்டகற்றப்பட வேண்டுமானால், இவ்வாறு ஐந்து ரூபாய் அபராதம் போட்டு வசூலித்து விட்டால் முடியுமா? இது கண் துடைப்புப் போன்றல்லவா இருக்கிறது. சாதிக் கர்வமுடைய சிலர் இதைப் போல எத்தனை ஐந்து ரூபாய் வேண்டுமாயினும் அபராதம் கொடுத்துவிட்டுத் தாழ்ந்தவர்கள் எனப்படுவோரை நெருங்கவிடமாட்டார்களே எனவே. இவ்வண்ணம் சாதி இறுமாப்புக்குரிய செயல்கள் நீதிமன்றத்தின் முன்வருகையில், சாதிக்கர்விகளைக் கடுமையாகத் தண்டித்தல் வேண்டும். இவ்வண்ணம் கடுந்தண்டனை அளிக்கப் படவில்லையாயின், சாதிக் கர்வம் நாட்டைவிட்டகலவே மாட்டாது.

## "உடுமலை பீரங்கி" மீது அடக்குமுறை அம்பு!

"உடுமலை பீரங்கி"யின் ஏப்பிரல். 30-ம் நாள், மே. 7-ம் நாள இதழ்களில் வெளிவந்த "கிருசதுவமத ஊழல்கள்" என்னும கட்டுரை, கிருததுவ மதததை 'அவமதிப்பதா'கவும், கிருத்தவ மதததினரின் மனதைப் 'புண்படுததுவதா'கவும கருதிககொணடு, அக கட்டுரையை எழுதிய "புரட்சிப் பிததன" என்ற புனை பெயருடன் எழுதிய தோழா எப. கே. விசுவநாதன், பத்திரிகை ஆசிரியர்:— பிரசுர காத்தா தோழா பி. ரஙகநாதன, அதனை அச்சிடட ஆநதிரா பிரிண்டிங் அவுசின் முதலாளி; வி. ஆதிநாராயணு ஆகிய மூவர் மீதும, சென்னை போலீசார் 19—10—49ல் பிரதம மாகாண மாஜிஸட்ரேட் கோர்ட்டில், இ. பி. கோ. 295 ஏ. பிரிவின்படி குற்றப பததிரிகை தாககல் செய்திருககின்றனர.

கத்தோலிக்க மதத்தில் இருககும் ஊழல்களை, பிராட்டஸடெண்டுகள் வெளியிட்டார்கள் என்ற காரணத்திற்காகப் பிராட்டஸ்டெண்டுகளையும், மதக கொளகையை ஏறக மறுதது, பகுததறிவு வழியைக கறபித்த பகுததறிவாளர்களையும் இஙகிலாநதில் ஆடசிபுரிநத, மேரி ராணி குற்றஞ்சாட்டினாள் — கொடுமை படுததினாள் — சிறை செய்தாள — கொலை தணடனை விதித்தாள—அவர்களது புத்தகஙகளைக கொளுததினாள என்றெலலாம் வரலாறு கூறக் கேட்டோம. அநத "மேரி ராணி" ஆட்சி மீணடும் சென்னையில் பூததுவிட்டதோ என்று ஐயுறவேண்டியிருககிறது. 'காருணய' மிகுநத காங்கிரஸ் அரசாஙகத்தின அடக்குமுறை அம்புகள், முற்போககுப்பேசசாளனின 'நா', எழுததாளனின் 'பேனு', அசசகததானின 'வயிறு' ஆகியவற்றின் மீது மாறி மாறி எய்யப்பட்டுககொணடே இருககின்றன. இது எங்குபோய் முடியுமோ?

## தாய் இரந்துண்ண மகன் தானம்செய்யும் கதை!

சென்னை மாகிலத்தில் மக்கள் தொகை பெருகி, அதன்மூலம், உணவு, உடை, உறையுள் முதலியவை எங்கு நோக்கினும் பற்றாக்குறையாக இருப்பதை நாம் அனைவரும் நன்கறிந்து, அன்றாடவாழ்க்கையில் அனுபவித்து வருகின்றோம். இங்குளள மக்களுக்கே வேலையில்லாமல், போதிய வருவாய் பலருக்குக் கிடைக்காமல், வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் தலைவிரித்தாடுகின்றன. சென்னை மக்களுக்கு இவ்வாறு ஏற்பட்டுள்ள குறைகளைப் போக்கி, அவர்களை உயிர் வாழவேனும் செய்வதற்குரிய ஏற்பாடுகளை விரைந்து செய்ய, சென்னை அரசாங்கத்திடம் பணம் இல்லை. சில முக்கியமான வளர்ச்சித் திட்டங்களைநிறைவேற்றுவதற்காக மத்திய அரசாங்கத்திடம் கேட்ட பணத்தையும், மத்திய அரசாங்கம் கொடுக்க மறுத்துவிட்டது.

இந்த நிலையில், சென்னை வந்துள்ள 4000 அகதிகளைச் சென்னையின் நிரந்தரக் குடிகளாக ஆக்கிவைத்து, அவர்களுக்கென இடங்களை ஒதுக்கித் தந்து, கட்டிடங்கள் எழுப்பி, ஊர் அமைத்துத் தருவதென்றால், இதனை மத்திய அரசாங்கம் வற்புறுத்துவதென்றால், இதற்கு சென்னை அரசாங்கம் இணங்குவதென்றால், இது கொடுமை மிக்கச் செயல் எனக் கூறுவதில் தவறென்ன?

சென்னைத் தலைநகரிலே வீடற்றுச் சாக்கடை ஓரங்களில் வாழும் மக்களுக்கு, மழை—வெயில்களினின்று தப்பி வாழக் கூடிய வாறேனும் குடியிருக்க வசதியாவது செய்து தர முயற்சிக்கப்பட்டதா? சென்னை மாநிலம் முழுவதிலும் உள்ள இது போன்ற வீடற்ற மக்களின் நிலைமையை உயர்த்த ஏதேனும் வழி காணப்பட்டிருக்கிறதா? கிராமங்களோடு இணைந்துள்ள சேரிகளின் வாழ்க்கை நிலையை உயர்த்த வழி செய்யப்பட்டதா? நம் நாட்டிலிருந்து வயிற்றுப் பிழைப்பை நாடிக் கடல் கடந்த நாடுகளுக்கு ஓடி, அங்குப் பல சகிக்க முடியாக் கொடுமைகளுக்கெல்லாம் ஆளாகித் திரும்பி வந்திருக்கும் மக்களுக்கு நலன் செய்ய வழி செய்யபபட்டுள்ளதா?

இங்ஙனம் நம் நாட்டு மக்களுடைய குறைபாடுகளையே தீர்த்துவைக்க முடியாத நிலைமையில் நம் நாடும். அரசாங்கமும் இருக்கும்போது, வடநாட்டிலிருந்து வந்திருக்கும் அகதிகள் 4000 பேரை இங்கு நிரந்தரக் குடிகளாக ஆக்கிவைத்து, அவர்களுக்காக வசதிகளைச் செய்து கொடுத்து அல்லற்பட்டுக்கொண்டிருப்பது எந்த வகையில் தக்க செயலாக இருக்க முடியும்? மத்திய அரசாங்கம் இவ்வாறு நம் நாட்டின் மீது, நமக்குத் தொல்லை தரும் விஷயங்களைத் திணிக்க முயலும்போதாவது, சென்னை அரசாங்கம் இவற்றை மறுத்துரைக்கும் துணிவு பெறுதல் வேண்டும். அப்படியில்லாதவரை, சென்னை மாநிலம், வடநாட்டின் சந்தையாக, குடியேற்ற நிலமாக ஆகிவிடும். என்றுதான் கருதவேண்டியதேற்படுகிறது.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| 3 மாதம் சந்தா | ரூ | 6—0—0 |
| 6 மாதம் சந்தா | ,, | 12—0—0 |
| ஒரு வருடசந்தா | ,, | 24—0—0 |

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

—மானேஜர்.

-49-

# ஊருக்கு உபதேசம் வீட்டிற்கு இல்லையோ?

## அடிமை தவிர்த்தல் அயல்நாட்டுக் கொள்கை: உள்நாட்டுக் கொள்கை அடிமைகாத்தல்போலும்!

### கடலலை ஓய்வதெப்போ — மக்கள் மனம் மாறுவதெப்போ!

### திரையை அடக்க அணையுண்டு — தீண்டாமையை ஒழிக்க....!

இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு அமெரிக்காவில் திக்விஜயம் செய்து வருகிறார். இந்தியாவின் அமைச்சருக்கு, அமெரிக்காவில் அமோக வரவேற்பும் சிறந்த உபசாரமும் அளிக்கப் பெறுவது கண்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம. மேனாட்டிலே, செல்வம் செழிக்கும் அமெரிக்காவிலே, கீழ்நாட்டுத்தலைவர், ''வளஞ்செழிக்கும் புண்ணிய பூமி''யின் புதல்வராகச்சென்றுள்ள நேருவுக்குப்புகழ்மாலை கிடைப்பது கண்டு இந்தியா அனைவரும்மகிழ்ச்சிப்பெருக்கடைந்திருக்கின்றனர்என்பதில்ஐயமில்லை. பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக வரும் நேருவின் அமெரிக்க விஜயப் படங்களே இதற்குச் சான்று பகரும்.

ஆனால், அமெரிக்காவிலே சுற்றி வந்து பிரசாரம் செய்யும் இந்தியத் தலைவர், ''இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அடிமைத்தனத்தில் ஆழ்த்தப்பட்டுள்ள மக்களை விடுவிப்பதேயாகும்''. என்று வற்புறுத்திக் கூறியுள்ளார். அதற்கு மேலும், ''தேசீய சுதந்தரம், தனிமனிதசுதந்தரம் ஆகிய இரண்டையும் நிலை நிறுத்துவதே இந்தியாவின் கொள்கையாகும்'' என்று கூறியுள்ளார்.

வெளிநாட்டிலே இந்தியாவைப் பற்றி ஒன்றும் சரிவர அறியாத மக்களிடையிலே, நம் நாட்டைப் பற்றி எவ்வளவு உயர்வாகப் பெருமைப் படுத்திப் பேசினாலும் அதை நாம் விரும்பத்தான் செய்வோம. ஆனால், அதே சமயத்தில் அங்குப்பேசிய வார்த்தைகளுள் ஒரு சிறு அளவாவது இங்கு நடைமுறையில் இருக்க வேண்டுமல்லவா?

உலக மக்கள் சுதந்தரத்தை விரும்பும் நேரு தேசிய சுதந்தரத்தையும, தனி மனிதன் சுதந்தரத்தையும் விரும்பும் தலைவர், தம் நாட்டில் இத்தகைய சுதந்தரம் இருக்க வேண்டும, இல்லாவிட்டால் உண்டாக்க வேண்டும், என்று விரும்பி, அதற்காவன செய்ய வேண்டாமா? இந்தியாவில் தனி மனிதன் சுதந்திரம் காக்கப் படுகிறதா? தனி மனிதன் இங்குச் சுதந்தரத்துடன் வாழ முடிகிறதா என்பதைப் பண்டித நேரு கவனித்தாரா? அல்லது அவரது கட்சியைச் சேர்ந்தவர்களோ, அவருடைய ஆட்சிக் குழுவினரோ தனி மனித உரிமையைக்காக்க ஏதேனும் செய்துள்ளனரா?

அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்களை அமெரிக்க மக்கள் நடத்துவதைவிடக் கேவலமாக இங்கு நம நாட்டு மக்களுள் ஒரு பெரும பகுதியினரை, இந்நாட்டுப் பழங்குடிகளை நடத்துவதை ஒரேயடியாக ஒழித்து அவர்களுக்கு மனித உரிமைகள் அனைத்தும் அளிக்கப்பட்டுள்ளதா? ''தீண்டினால் தீட்டு'' என்னும் மனப்பான்மையை உடனடியாக அகற்ற முடிந்ததா? அவர்களும் மற்ற மக்களோடுசரிசமமாகப் புழங்கி வாழ்ந்து, மக்களாகவே காட்சியளிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டனவா? இந்தியாவிலே, தீண்டப்படாத மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமை, அவர்களை நடத்தும் முறை ஆகியவற்றினைவிடக் கேவலமான அடிமைத்தனம் வேறு ஒன்று இருக்க முடியுமா?

இக் கொடுமையை நேருவோ அவர் அரசாங்கமோ இன்றுவரை அடியோடு ஒரே சட்டத்தின் மூலம் போக்க முயன்றதுண்டா? ஏன் முயலவில்லை?

''சட்டம் போட்டுவிட்டால் போதுமா? மக்கள் மனநிலை மாறி வர வேண்டுமல்லவா? அதற்காகப் பையப் பைய இவ்விஷயத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன'' என்று காரணம கூறப்படுகிறதே இதுநியாயமா? மக்கள் மனநிலைமாறுவதும், கடல் அலை ஓய்வதும் இந்த நாட்டில் ஒன்றல்லவா? மக்கள் மனநிலை மாறுவது என்று இக் கொடுமை வேருடன் களையப் படுவது என்று?

போகட்டும், மக்கள் மனநிலை மாற வேண்டும் என்பதற்காவது ஏதேனும் தீவிர முயற்சி எடுத்துச் சொல்லப்பட்டதா? இல்லையே! மீண்டும் சனாதன தர்மகொள்கைகள, வர்ணாச்சிரம தர்மக்கொள்கைகள் முதலியவைவெவ்வேறுவடிவத்தில் நாட்டில் முன்னைவிட அதிகமாக நடமாடிக் கொண்டிருக்கின்றனவே! நாட்டிலே மக்களைப்பல பிரிவுகளாகப் பிரித்து, ஒருவருக்கொருவர் ஒற்றுமையடைய முடியாத படி தடுத்து, உயர்வு தாழ்வு கற்பித்து, பல மக்களை அடிமைகளைப்போல ஒதுங்கிவாழச்செய்து, மக்கள் இனத்தைக் குட்டிச்சுவராக்கி நாட்டு உட் பல வெளிநாட்டுப் படையெடுப்புகளுக்கும், வெளிநாட்டவரின் ஆதிக்கத்திற்கும் காட்டிக்கொடுத்தவைச்சனாதன-வர்ணாசிரம- மனுவாதி தர்மங்கள் நம்மவர்களிடைச் செய்து வைத்த பிளவால் ஏற்பட்ட ஒற்றுமையின்மையும் துவேஷமும், கட்டுப்பாட்டுக் குலைவுமே அல்லவா? இங்ஙனமிருக்க மீண்டும் இவற்றை நாட்டிலே நடமாட விட்டுக்கொண்டிருக்கையில், இவற்றிற்கு நாட்டில் ஆதிக்கம் கொடுத்துவிட்டிருக்கையில், இவை நாட்டில் உலாவ அனுமதித்து விட்டிருக்கையில் மக்கள் மனம் மாறுதலடையும் என எதிர்பார்ப்பது குதிரைக்கொம்பாகவல்லவா முடியும்?

அதுதான் போகட்டும். அரசியல் துறையிலாயினும் இங்கே மக்கள் சுதந்தரம் காக்கப்படுகிறதா? பொது மக்கள் பாதுகாப்பு அவசரச்சட்டங்கள் இல்லாத காங்கிரஸ் ஆட்சி இன்றிருக்கிறதா? அதுவும் இந்தச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் செய்யும் வேலைகளை நீதி மன்றம் விசாரணை செய்யவும உரிமை இல்லை என்ற அளவுக்குச் சர்வாதிகார உரிமை பெற்று விளங்கும் சட்டங்களுடன் ஆட்சி செலுத்தும் நாட்டிலே, தனிமனித உரிமை இருக்கிறது என்று கூறுவதே கேலிக்கூத்தாக இல்லையா?

இதுதான் ஒழியட்டும். புதிதாக வரும அரசியல் திட்டமாவது தனிமனித உரிமையைக் காக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றதா என்று பார்த்தால், பாதுகாப்பு நாட்டமைதிக்காப்புஎன்றபோர்வைகளின் கீழ் தனிமனித உரிமை எல்லாவகையிலும் பறிக்கப்படும் வகையில் அல்லவா இருக்கிறது. நம் நாட்டு மக்களனைவரும் முழு உரிமைகளுடன் வாழ வேண்டுமென்று விரும்பும் இக்காலத்தில், அந்தச் சுதந்தர எண்ணத்தை அழிக்கும் வகையில் அரசாங்கச் சட்டதிட்டங்கள் அமைகின்றன வென்றால் இதனை என்னென்பது! ''மனிதன் பிறக்கும் போது சுதந்திரமுடையவனாகவே தான் பிறக்கிறான். ஆனால், எங்குப் பார்த்தாலும் அவன் சங்கிலிகொண்டு பிணைக்கப்பட்டே யிருக்கிறான்'' என்று 200 ஆண்டுகளுக்கு முன்னர், ரூசோ கூறியிருப்பதை மெய்ப்பிக்கும் நிலையில் தான் நாட்டின் நிலை போய்க்கொண்டிருக்கிறது.

எனவே, அமெரிக்காவில், இந்தியத் தலைவர் பெருமையடைந்தாலும், இந்தியா பற்றிய புகழ் மாலையைப் பாடிக்கொண்டிருந்தாலும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை மக்களனைவரையும அடிமைத் தலையினின்று மீட்பதே என்று கூறினாலும், இந்தியாவின் உள்நாட்டுக் கொள்கை என்னவோ, பழைய பத்தாம் பசலிச் சனாதனக் கொள்கையாகவே இருந்து வருகிறதென்பதையும், தனிமனித உரிமை என்பது எட்டளவில் கூட இங்கு இல்லாமலிருக்கிறதென்பதையும் எவரும் மறுக்கமுடியாது.

---

## கல்வியமைச்சரின் திறமை!

### நுணலும் தன் வாயால் கெடும் என்பதன் விளக்கம்

மாநிலக் கல்வி ஆலோசனைக்குழுவினர், சென்னை நகரில் கட்டாயக் கல்வி போதிய அளவு தக்க முறையில் நடைமுறையில் இல்லை என்பதையும், இக்குறையை நீக்கி, கட்டாயக்கல்வியைத் தக்கபடி நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென்பதையும் பற்றி விவாதித்த போது, கல்வியமைச்சரும் இவ்விவாதத்தில் கலந்து கொண்டார். ''ஒரு குழந்தையைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டால், ஐந்தாண்டுகள் வரை அக்குழந்தை பள்ளிக் கூடத்தில் படித்தே தீர வேண்டுமென்று ஒரு யோசனை கூறினர். இதுநல்லயோசனைதான். ஓரைந்தாண்டுக்காலமாவது பள்ளிக்கூடத்தில் படித்தால்தான், எழுதப் படிக்கவாவது தெரிந்து கொள்ள முடியும். ஆனால் பெற்றோர்கள் பெரும்பாலும் பரம ஏழைகளாகயிருக்கின்றார்களே! குடும்பத்தை நடத்துவதற்காகச் சற்று வயதான பிள்ளைகளையும் வேலைக்கனுப்பி வைத்து, அவர்கள் மூலம் கிடைக்கும் ஊழியத்தையும் சேர்த்துப் பார்த்தால் தானே குழந்தைகளுடைய, அவர்களுடைய வாழ்வு ஓரளவேனும் ஒழுங்காய் நடைபெற முடியும்!

இந்த விஷயத்தைக் கல்வியமைச்சரிடம் எடுத்துக் கூறியபோது, ''குழந்தைகளில்லாத குடும்பத்தினர் என்ன செய்வார்கள்? அவர்கள் எவ்வாறு குடும்பத்தை நடத்துகிறார்கள்?'' என்று கூறினார். இத்தகைய கேள்விக்கு எவராலாவது பதில் கூற முடியுமா? அங்கிருந்த குழுவினர் அனைவரும் இந்தக் கேள்வியைக் காதில் கேட்டவுடன், உரத்துச் சிரித்தால் கேலி செய்வதுபோலாகுமெனக் கருதி, மனத்துக்குள்ளேயாவது சிரித்திருப்பார்கள்.

நமது கல்வி அமைச்சர், அறிவை வளர்க்கும் இலாக்காவின் பொறுப் பேற்றவர் கேட்கிறார். இவ்வாறு என்றால், இந்நிலையைக்கண்டு நாம் என்னதான் கூறவேண்டியிருக்கிறது.

---

## வாழ்க்கைத் தொல்லை வளருகிறது.

### வசதி செய்ய வழிகாண முடியவில்லை அரசாங்கத்தினருக்கு

காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு, நாளுக்கு நாள் வாழ்க்கைத் தொல்லைகள் வளர்ந்து கொண்டே வருகின்றன ஒருநாள் திடீரென்று தீப்பெட்டி மறைந்துவிட்டது மார்க்கெட்டிலிருந்து மற்றொரு நாள் துணிகள் மறைந்தன. இன்னொரு நாள் மிளகு மறைந்தது. பிறகு பால் மறைந்தது. இப்போது சர்க்கரை மறைந்தது. இவ்வாறு திடீர் திடீரென்று சாமான்கள் மறைவதும் கள்ள மார்க்கட்டில் அவை ஏராளமான விலைக்கு விற்கப்படுவதும், பின்னர், அவற்றின் விலையை உயர்த்தி நிர்ணயம் செய்த பிறகு அவை முன்போல் கிடைப்பதுமான நிலைமை ஏன் ஏற்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்க அரசாங்கத்தாலும் முடியவில்லை இவ்வாறு ஒவ்வொரு சாமானும் அப்போதைக்கப்போது மறைந்து போனால்தான் வணிகர்களின் பணப்பேராசை நிறைவேறும்போலும். அரசாங்கமோ இத்தகைய நிலை இனி எப்படி வண்ணம் தடை செய்ய முடியாத நிலையிலிருக்கிறது. அதனால்தான் வாரத்திற்கொருவேளை உணவைத் தியாகம் செய்யுமாறும் கச்சையை இடுப்பில் இறுக்கக் கட்டிப் பசியடக்குமாறும்பிரசாரம்செய்துகொண்டு வருகிறது.

உணவு போதாப் பஞ்சம் வயிற்றைக் கிள்ள, சர்க்கரையில்லாத் தேநீர், மிளகில்லாரசம் பாலில்லாக் காபி, உளுந்தில்லா இட்லி, சட்டையில்லா உடம்பு என்றெல்லாம் பழகிக்கொள்ளும் அளவுக்கு மக்கள் நிலை தாழ்ந்துவிட்டது. அரசாங்கத்தினரோ தம்பிரசாரமே மக்கள் மனத்தைத் திருப்தி செய்துவிடக்கூடும் என்றும், சங்கடங்களுக்குரியகாரணத்தை விதியின் மீது சுமத்திவிடலாமென்றும் மக்கள் மீறிக்கிளர்ச்சி செய்தால் கண்ணீர்ப்புகை, தடிப்பிரயோகம் அடக்கு முறைச்சட்டங்கள் முதலியவை இருக்குறவரை ஆபத்தே இல்லை என்றும் எண்ணிக்கொண்டு மக்களுடைய வாழ்க்கைத் தொல்லைகளை அகற்றி நல்வாழ்வு வாழவைப் பதற்குரிய வழிகாண முயலவில்லை. இந்த ஒவ்வொரு பஞ்சத்திற்கும் ஒவ்வொரு பொருளும் திடீர் திடீரென மறைவதற்கும் மூலகாரணமாயிருப்பவர்கள் சேமிப்புக்காரன், கள்ள வாணிகன், இலஞ்சம் வாங்கிப் பிழைக்கும் அதிகாரி, அல்லது திறமையில் குறைந்த அதிகாரி ஆகியவர்களே என்பதை அரசாங்கம் உணர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள முனையவேண்டும். தியாகத்தின், கதர்க் கொடியின், கதர் உடையின் காங்கிரஸ் சேவையின், முதலாளியாக இருப்பதன் போர்வைக்குள் புகுந்து கொண்டிருப்பவர்களாயிருப்பினும் கடுமையாகத் தண்டிப்பது என்ற நிலைமையை உண்டாக்க அரசாங்கத்திற்குத் துணிவுண்டா?

---

## விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம் ரூ5—0—0
நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.
—மானேஜர்

---

## பயனற்ற திட்ட[ம்]

### நகராண்மைக்கழக[...] உறுப்பினர் கருத்து

சென்னை நகராண்மைக்கழக சிப்பந்திகளுக்குக் கட்டாய சேமிப்[பு] நிதித்திட்டம்(பிராவிடண்டு நிதி)[...] படுத்துவது பற்றிய பிரச்சினை 19—10—49ல் நடைபெற்ற [...] சபைக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்பொழுது நகராண்மைக்கழகக்கமிஷனர், தோழர் நரசிம்ம[...] அவர்கள், நகரசபை சிப்பந்[தி]களுக்கு உதவிச்சம்பளமும் (பென்ஷன்) சேமிப்பு நிதி அளித்தலும் ஒரே காலத்தில் செய்வதென்றால், அதற்கு நகராண்மைக்கழகத்தின் செல்வநிலை இடந்தராது என்று பேசியிருக்கிறார். நகராண்மைக்கழகச் சிப்பந்திகள் தமது பிற்கால வாழ்வுக்காக நிதி சேமித்து வைக்க வேண்டுவது அவசியமேயாயினும் தற்போதுள்ள நிலைமையில், அ[...] வது அக விலை ஏற்றம் அ[...] கடந்து சென்று கொண்டிருக்[கும்] நிலையில், கட்டாய சேமிப்பு என்[ற] முறையில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி வைப்பது கடினம். பொருள்களின் விலை ஏற்றத்தின் காரணமாகப் பெரும்பாலோர் தமது வருவாய் போதாததா[ல்] கடன் வாங்கிக்காலங்கழிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்[நிலை]யில் வருவாயில் ஒரு பகுதியைக்கட்டாய சேமிப்புக்குத் தருவதென்றால், அவர்கள் தங்களுடைய இன்றியமையாச் செலவுகள் சிலவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அல்லது அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்படவேண்டும். இரண்டுக்கும் வழியில்லையேல் அவர்கள் வறுமையில் வாட வேண்டிய நி[லை] ஏற்பட்டு விடும்.

உதவிச் சம்பளம் (பென்ஷன்) அளிக்கப்படுகிறதே என்று கேட்கப்படலாம். ஆனால் அச்சம்பளத்தால் சிப்பந்திகள் பெறும் உதவி எதி[ர்] காலத்தில் கிடைக்கப்போகும் ஒரு சிறு உதவியேயன்றி, வே[லை] முடிந்து ஓய்வு பெறுவோருக்[கு] உருப்படியாக உதவக் கூடிய ஒ[ன்]றாகாது. எனவே தான், இ[த்] திட்டத்தை எதிர்த்துப் பேசிய தோழர் சி எஸ்.அந்தோணிபிள்ளை ''பிராவிடண்ட் நிதிதிட்டம் என்[று] கூறுவது பொருத்தமானதல்[ல] நிதிக்குச் சிப்பந்திகள் கொடுக்[கும்] பணத்துக்கு சமமாக அதிகா[ரி]களும் பணம போட்டால் ஒழி[ய] பிராவிடண்ட் நிதியினால் சிப்ப[ந்தி]களுக்கு எவ்வித நன்மையும் ஏ[ற்]படாது'' என்று பேசியிருக்கிறு[ர்]. முடிவில் இத்திட்டத்தை மீண்[டும்] ஆராய்ந்து பார்க்க, வரி நிதிகுழுவுக்கு அனுப்ப வேண்டுமென் முடிவு செய்யப்பட்டது. அக்கு[ழு] சிப்பந்திகள் நலங்கருதி ஆவ[ன] செய்யும் என்று நம்புகிறோம.

---

### நீத்தார் நினைவுநாள்

அரகண்ட நல்லூர்— திருக்கோ[யில்]லூர் உயர் நிலைப்பள்ளியில் இ[...] எதிர்ப்பு மறியல் செய்து சிறை சென்றவரும், தி. மு. க. உறு[ப்]பினருமானத் தோழர் ஏ. ஆர். [பரசு]ராமன் அவர்களுடைய தாயாரி[ன்] நினைவு நாள் 29—9—49-ல் [எவ்]வித ஆரிய சடங்குமின்றி நட[ந்]தது. தனது தாயா[ர்] இயற்கை யெய்திய பொழு[து] தோழர் ஏ. ஆர். பரசுராமன் ச[...] தைக்கூட பார்க்க இயலாமல் சி[றை]யிலிருந்தார். எனத் தோழர் ஜி. பழனிவேலு அறிவிக்கிறார்.

# திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

## 22-10-49

ம்பரம்:— ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத் தம்மையார், எஸ். கே. சாமி

ற்காடு :— காஞ்சி. கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல்

ணி:— சி. பி. சிற்றரசு,

## 23-10-49

ஞ்சிபுரம்:— சி. என். அண்ணாதுரை, கே. அன்பழகன், சத்தியவாணிமுத்து. சி. டி. டி. அரசு, ஏ. ஆர். வெங்கட்ராமன்.

ருவாரூர்.— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத்

ருவண்ணாமலை:— சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்.

டலூர் (ஓ. டி.) :— ஏ. சித்தையன், என். வி. நடராசன்

ண்டக்காமுத்தூர்:—ஜி. என். ராஜு (கோவை)

ண்டிவனம் :— இரா. இளம்வழுதி, இராமாமிர்தத்தம்மையார், கலைமணி

த்தலக்குண்டு :— டி. கே. சீனிவாசன்

ய்யன்பாளையம்:—இரா. சு. தங்கப்பழம், கே. வி. கே. சாமி, வெ. முத்தடிகள்

## 24-10-49

த்துறைப்பூண்டி:—ஈ. வெ. கி. சம்பத்

## இனி நடப்பவை

சென்னை எழும்பூர் — குட்டி ...மன்திரித் தெரு 36-வது எண் ...ள்ள வள்ளுவர் மன்றக் கட்டிடத் ...ல் 22—10—49 சனி மாலை 6- ...ணிக்குப் புலவர் தோழர் ஆர். ...ஸ். ராமன் அவர்களால் மன்ற ...ர்பில் குறள் வகுப்பு நடத்தப் ...டும்.

* *

...க்கலாஸ்புரம் (வ. ஆ.)— திரா... முன்னேற்றக் கழகக் கிளை ...ம் தோற்றுவிக்க 20—10—49 ...ழமை மாலை 7-மணிக்கு வடக்க... ...டு வி. என். தத்தப்பன தலைமை... ...ல் அமைப்புக் கூட்டம் நடை... ...றும். கழகத் தோழர்களை வந்து ...ந்து கொள்ளுமாறு தோழர் ஈ. ...லஷ்மணன் அழைக்கிறார்.

* *

திருச்சி—திருச்சி திராவிட மாண... முன்னேற்றக் கழக செயற்... ...க் கூட்டம் இவ்வூ கருணாநிதி ...க்கில் 26—10—49 மாலை 5. ...ணிக்கு நடைபெறும்.

* *

திண்டிவனம் — திண்டிவனம், ...வேரிப்பாக்கம் தி. மு. க. கிளை ...ன் துவக்கவிழா 23-10-49 ...ழமை மாலை 6-30 மணிக்கு காவே... ...பாக்கம் பெரியார் திடலில் நடை... ...றும். அதுபோது தோழர்கள ...ரா. இளம்வழுதி பி. ஏ, திலகை... ...மணி, தோழியர் மூவாலூர் ...ராமாமிர்தத்தம்மையார் ஆகி... ...சொற்பொழிவாற்றுவர். ...லமும் உண்டு.

* *

...ய்யன்பாளையம்—திராவிட முன்... ...க் கழகம— அய்யன்பாளைய... ...யின் துவக்கவிழா இவ்வூ... ...தி மைதானத்தில் 23-10-49 ...லை 4-மணிக்குப்பட்டிவீரன்பட்டி ...ழர் கே. நடராசன் அவர்கள் ...மையில் நடைபெறும். அ... ...து தோழர்கள் இரா. சு. தங்கப... ...பம், கே. வி. கே. சாமி, வெ. ...த்தடிகள் ஆகியோர் பேசுவர்.


## ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலைமணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

(1) தேனி,
(2) தச்சநல்லூர்,
(3) கீவளூர்,
(4) கடலூர்,
(5) முசிறி,
(6) திருமலைராயன் பட்டணம்,
(7) செம்மனூர்கோயில்,
(8) மங்கநல்லூர்,
(9) பாப்பா நாடு,
(10) நன்னிலம்,
(11) ஜோலார் பேட்டை,
(12) பரங்கிபேட்டை,

## ஏஜெண்டுகளுக்கு

அதிகபடி பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுகள் முன் பணம் அனுப்பினாலன்றி கவனிக்கப்படமாட்டாது.

—"நிர்வாகி"

## பாதாமி லேகியம்

இரத்தவிர்த்தி, தேகபிடம், உஷ்ணசாந்தி, நரம்பு பலம் இவைகட்கு புத்துயிரளித்திடும் சிறந்த தாதுபுஷ்டி தருவதில் நிகரற்ற சஞ்சிவி.

30 வேளை லேகியம் 5—0—0

P. S. R. பங்கஜம் வைத்தியசாலை பழனி, (S. I.)

## அவள் வாழ்வு...?

சிறந்த கதைத்தொகுப்பு

ஆசிரியர் :— ஆசைத்தம்பி.

விலாசங்கட்கு:— விலை 0—8—0

திராவிடன் பதிப்பகம், P. B. No. 18, வேலூர். N. A.


## வ. உ. சி. இளைஞர் மன்றம்

செம்மனூர், அக். 16—

கடந்த 8—10—49 சனி மாலை 5-30க்கு தோழர் கும. இலக்குமணன் அவர்களின் தலைமையில வ. உ. சி. "இளைஞர் மன்றம்" என்ற ஓர் கழகம் நிறுவப்பட்டது.

தலைவர் முகவுரைக்குப்பின் கே பி சோலைமலை, கே. சுப்பிரமணியன். என். இராமனுஜன், எல். என். நாச்சியப்பன், எஸ். இராமனுஜன், ஆகியவர்கள் இளைஞர் மன்றத்தின் அவசியத்தைப்பற்றியும், தற்கால அரசியல் நிலைமைகளைப் பற்றியும், மிகவும் உணர்ச்சியாகப் பேசிய தோடு திராவிட முன்னேற்றக்கழகத் தோடு இணைந்து ஒத்துழைப்பதுபற்றியும தீர்மானிக்கப்பட்டது. மன்னர் கழகத்திற்கு கே. காசிவிஸ்வநாதன் தலைவராகவும், எஸ் இராமனுஜன் செயலாளராகவும், பி எல். சுப்பையா துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி நவிலக்கூட்டம் இனிது கலைந்தது. எனச் செயலாளர் தெரிவிக்கிறார்.

## பிறப்பு

மதுரை, அக் 9—

இவ்வூர் தோழர் ஏ. எஸ். ராசன் அவர்களின் துணைவியார் தோழியர் கற்பகமாளுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு, இன்று நிகழ்ந்த மேற்கு வட்ட தி. மு. கழக ஆரம்ப விழாவில் "தமிழ்ச்செல்வன்" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் மகிழ்ச்சி! [ஆ-ர்]

* * *

சென்னை, அக். 13—

காஞ்சிபுரம் தோழர் எம். சாமிநாதன் அவர்கள் வாழ்க்கைத்துணைவியார் தோழியர் குணபூடணம் அம்மையாருக்கு, 10-10-49ல் பிறந்த பெண் மகவுக்கு "மல்லிகா" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம், மகிழ்ச்சி! [ஆ-ர]

* * *

சென்னை, அக். 17—

சென்னை தோழர் சி பஞ்சாட்சரம் அவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு, "இளங்கோ" எனப்பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம் மகிழ்ச்சி! [ஆ-ர]

* * *

ஆலத்துடையான்பட்டி, அக். 16—

முசிறிதாலுகா ஆலத்துடையன் பட்டிதோழர் எ. எம். பழனியாண்டியின் அவர்களின் துணைவியார் தோழியர் கே பி. மாணிக்கம் அம்மையாருக்கு 17-8-49ல் பிறந்த ஆண் மகவுக்கு 11-10-49ல் "அண்ணாதுரை" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப் பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர]

* * *

திருத்தங்கல், அக். 13,—

இவ்வூர்த் தோழர் எம். தங்கமுத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் மாரியம்மாளுக்கு, 10—10—49ல் பிறந்த ஆண்மகவுக்கு "வாசன்" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர்]

* * *

க. புதுப்பட்டி, அக். 15—

இவ்வூர் தி மு க. செயலாளர் தோழர் ஆர். கே கே. சாமி அவர்கள் துணைவியர், தோழியர் மயில்தாய் அவர்களுக்கு; 9-10-49ல் பிறந்த பெண்மகவுக்கு "மாலைமணி" என்றும். தோழர் ஆர். பொன்னையா அவர்கள் துணைவியார் தோழியர் பொன்னுத்தாய் அவர்களுக்கு 4-8-49ல பிறந்த பெண் மகவுக்குக் "காலை மணி" என்றும் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். மகிழ்ச்சி! [ஆ-ர்]


புதிதாக ஆரம்பிக்கப்பட விருக்கும் ஓர் கூட்டுறவு வைத்திய சங்கத்திற்கு அநுபவமும் தேர்ச்சியும் பெற்ற ஒரு டாக்டரும், மருத்துவச் சிகிச்சை பயின்ற மாதர்களிருவரும் தேவை, ஊதியம், பஞ்சப்படி சர்க்கார் விகிதப்படி. உடனே விண்ணப்பிக்கவும்.

A. S. T.
C/o 'மாலைமணி' சென்னை 1.


# கழகத் தோழர்களுக்கு

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சேர்க்கும் இரசீது புத்தகங்கள், அந்தந்த மாவட்டத்திலிருக்கும் தி. மு.க. அமைப்புக்குழு உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக்கழகச் செயலாளர்களும், கிளைக்கழகங்கள் உருவாகாதவூர்களிலே உள்ள கழக முக்கியஸ்தர்களும், தேவையான அளவு இரசீது புத்தகங்களை, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைப்புக்குழு உறுப்பினரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த எண்ணிலிருந்து இந்த எண் வரையிலும் உள்ள இரசீதுகளையும், இந்தஇந்த எண்கள் உள்ள புத்தகங்களையும், பெற்றுக்கொண்டோம் என்று, புத்தகங்களை பெற்றுக் கொள்ளும் தோழர்கள், அமைப்புக்குழு உறுப்பினரிடம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

கிளைக் கழகச் செயலாளரோ, கிளைக் கழகச் செயலாளரால் நியமிக்கப்பட்ட ஒருவரோ, அல்லது கிளைக் கழகம் ஏற்படாத ஊரில் கழகமுக்கியஸ்தரோ, உறுப்பினர் சேர்க்கும் பணியை மேற்கொள்ள வேண்டும்

தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய இரசீதைச் சென்னைத் தலைமைக் கழகத்திற்கும், மாவட்டக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய இரசீதை அந்தந்தமாவட்ட அமைப்புக்குழு உறுப்பினருக்கும், கிளைக் கழகத்தில் இருக்க வேண்டிய இரசீதைக் கிளைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

சந்தாவில் இரண்டு அணாவைக் கிளைக்கழகத்திற்கும். இரண்டு அணாவைத் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டும். கிளைக் கழகங்கள் ஏற்பட்டு, மாவட்டக் கழகங்கள் முறையாக உருவாகும் போது, மாவட்டக் கழகங்களுக்குச் சேரவேண்டிய தொகை அவற்றிற்குஅனுப்பிவைக்கப்படும் தலைமைக் கழகத்தினரால்.

அந்தந்த மாவட்டங்களில அமைப்புக்குழு உறுப்பினர்களாக இருப்பவரின் முகவரிகள் கீழே தரப்பட்டிருக்கின்றன. அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த கழகத் தோழர்கள், இரசீது புத்தகங்களை, அந்தந்த அமைப்புக்குழு உறுப்பினர்களிடம பெற்றுக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

என் வி. நடராசன்
செயலாளர்,
தி. மு. க அமைப்புக்குழு

## அமைப்புக் குழு உறுப்பினர்களின் மாவட்டமும்—முகவரியும்

**சென்னை :—**
கே. கோவிந்தசாமி,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
2/45 முத்துமாரிச செட்டித் தெரு.
மண்ணடி,
சென்னை...1.

**செங்கற்பட்டு :—**
எம். சின்னையா,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
தமிழர் உணவு விடுதி,
செங்கற்பட்டு.

**தென் ஆர்காடு:—**
கே. டி பி பழனியப்பன,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
குறிஞ்சிப்பாடி,
(தெ. ஆ மாவட்டம்)

**வட ஆர்காடு :—**
எம். நடேசன்,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
10, சாமி செட்டித் தெரு,
திருப்பத்தூர் (வ. ஆ)

**சேலம் :—**
ஏ. சித்தையன்,
தி மு க அமைப்புக் குழு உறுப்பினர்,
வாசகசாலைத் தெரு,
செவ்வாய்ப்பேட்டை,
சேலம்.

**கோவை-நீலகிரி:—**
ஆர். வெங்கடாசலம்.
தி. மு க அமைப்புக் குழு உறுப்பினர்,
உடுமலைப்பேட்டை.
(கோவை மாவட்டம்)

**தஞ்சை:—**
கே. கே. நீலமேகம்.
தி மு க. அமைப்புக்குழு உறுப்பினர்,
பஞ்சுக்காரத்தெரு,
கும்பகோணம்.

**திருச்சி :—**
ஜி. பராங்குசம்,
தி மு. க. அமைப்புக்குழு உறுப்பினர்,
"என் எஸ் பங்களா"
தெப்பக்குளம் போஸ்ட்,
திருச்சிராப்பள்ளி.

**மதுரை: —**
எஸ். முத்து,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
அழகாடி,
மதுரை.

**இராமனுதபுரம்:—**
எம். எஸ். ராமசாமி,
தி. மு. க. அமைப்புக் குழு உறுப்பினர்,
புளியம்பட்டி,
அருப்புக்கோட்டை.
(இராமனுதபுரம் மாவட்டம்)

**திருநெல்வேலி:—**
கே.வி.கே. சாமி,
தி. மு. க அமைப்புக்குழு உறுப்பினர்,
தூத்துக்குடி.

# துவக்க விழாப் பொதுக் கூட்டங்கள்

## புதுக்கோட்டை

புதுக்கோட்டை, அக் 17—

திராவிட முன்னேற்றக்கழக நகர்க்கிளையின் துவக்க விழாக் கூட்டம்,நேற்றுகாலை 10 மணிக்கு ராஜாடாக்கீஸில் வெற்றிகரமாக நடந்தேறியது.

மக்கள்கொட்டகைமுழுவதும் நிரம்பியிருந்ததோடு, வெளிப்பக்கங்களிலும் நின்று கூட்ட நடவடிக்கைகளை மிக உற்சாகத்தோடு கவனித்துக்கொண்டிருந்தனர். கொட்டகையின் உட்புறத்திலும், வெளியிலும், முகப்பிலும் கழகக்கொடியின் அடையாளத்தைக்கொண்ட வண்ணக் காகிதங்களாலான சர மாலைகள் அழகுபட தொங்க விடப்பட்டிருந்தன. வீதியில் நின்றும் மக்கள் சொற்பொழிவுகளைக் கேட்டின்புறும் வகையில ஒலி பெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. காலை வேளையில் துவக்க விழாக்கூட்டம் வைத்திருந்தும், மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வந்து கூடியிருந்தது மக்கள் ஆர்வத்தின் மிகுதியைக் காட்டுவதாக இருந்தது.

கழகத்தோழர் ஒருவர் சில பாட்டுகள் பாடிக்கூட்டத்தினரை மகிழ்வித்தார். தோழர் பெரியண்ணன அவர்கள், கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறி தோழர் ஏ. தியாகராசன் அர்வகளைக் கூட்டத்திறகுத் தலைமை வகிக்கும்படிகேட்டுக் கொண்டார். மற்றொரு தோழர் வழிமொழிய தலைவர் தலைமையேற்று முன்னுரையாகச் சில கூறினர்.

பின்னர்,தோழர்தில்லைவில்லாளன் திராவிட முன்னேற்றக் கழகத் தோற்றத்திற்குரிய காரணத்தைப பொதுமக்கள நன்கு அறிந்திருக்கிறார்கள் என்றாலும், அதுபற்றி பரவியுள்ள கருத்துக்களைப் பற்றித்தெளிவு படுத்தவே இத்துவக்க விழா நடைபெறுகிறது. என்று சில கூறினர்.

அடுத்துத் தோழர் ஏ. கே. வேலன் அவர்கள், பெரியாரின் பொருந்தாத் திருமணமும், அது குறித்து அவர் நடந்துகொண்ட ஜனநாயக முறைக்கு மாறுபாடானபோக்குமசாவாதிகாரத்தன்மையும், பெரும்பான்மையோரை திராவிடர்கழகத்தை விட்டு வெளியேறச் செய்துவிட்டது என்றும், உண்மை உழைப்பாளிகளின் முகாமாக திராவிட முன்னேற்றக்கழகம் விளங்குகிறது என்றும், அரசாங்கத்தின அடக்குமுறைகளை எல்லாம் எதிர்த்துப போராடி நாட்டிற்கு நல்லது செய்யவே முன்னேற்றக் கழகத்தார் திட்டம் தீட்டி வருகிறார்கள் என்றும் விளக்கமாகப் பேசினர்.

அதற்குப் பிறகுதோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது "பெரியார் சீர்திருத்தக் கருத்துக்களின் சின்னமாக விளங்கினார் என்றும், அந்த ஒரு தன்மைக்காகவே அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தோம் என்றும், மணியம்மையைத் திருமணம் செய்து கொண்டு ஒரு மட்டரகமான— இழிந்த உவமைக்கு ஆளாகிவிட்டார் என்றும், தொண்டர்கள் யார்மீதும் நம்பிக்கை இல்லை என்று கூறி, பல கொள்கைத் [illegible]ள் இழைப்பதன் மூலம [illegible]ம் செய்துகொள்ளபுகுந்தால், தொண்டர்களுக்கும் அவமானம், கொள்கைகளுக்கும் அவமானம் ஏற்பட்டுவிட்டது என்றும், தொண்டர்கள் தம் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும், கொள்கைகளைப் பாதுகாத்துப் பரப்பவும் கண்ணியத்துடன் வெளியேற வேண்டிய அவசிய நிலையை நாங்களே ஏற்படுத்திக்கொண்டோம் என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலும் ஒருசேர நின்று பாடுபடும் என்றும, தேர்தலுக்கு நின்று பதவி பிடித்தல போன்ற உடனடி அரசியல பிரச்சினை எதுவும் கிடையாது என்றும், அதற்குரிய அறிவுநிலை நாட்டுப் பொதுமக்களிடம் இப்பொழுது ஏற்படவில்லை என்றும், காங்கிரஸ் ஆட்சி பாசிசப் பாதையில் எப்படிச் செல்லுகிறது என்பது பற்றியும், தமிழ். ஆங்கிலம் இந்த இரண்டு மொழிகளையும் தவிர, வேறு மொழி எதுவும் இப்போதைய நிலையில தேவையிலலை என்றும், இந்தி எந்த விதத்திலும் அவசியமில்லாததாகும் என்றும், திராவிட முன்னேற்றக் கழகக் கருத்தை ஏற்றுக் கொள்வோர் அதைப் பரப்ப முன் வரவேண்டும் என்றும் பேசினார்.

தலைவர் இடையில் அவசர வேலையின் காரணமாக செல்ல வேண்டி ஏற்பட்டதால், தோழர் பெரியண்ணன் அவாகள் தலைமை வகித்தார்கள். முடிவுரையாக அவர் சிலகூற நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## உதகமண்டலம்

உதகை, அக். 17—

1949-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ம் நாள் உதகை திராவிட சதுக்கத்தில், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா வழக்கறிஞர் தோழர் கிருட்டினசாமி பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்" என்பது பற்றித் தோழர்கள் என். எஸ். எம். ஆறுமுகம், திராவிட அரசு தி. சி. இராமு, எஸ். எம். சஞ்சீவிராசு ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

இறுதியாகத் தலைவர் முடிவுரைக்குப்பின், செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. (செ-1)

## மாதவரம்

மாதவரம், அக். 17—

தோழர் கோ. தேசிக அவர்கள் தலைமையில், தி. மு. கழகம் மாதவரம் கிளை நடந்தேறியது. அதுசமயம் தோழர் சு. லாரன்ஸ் அவர்கள் கொடியேற்றுவித்தார். திராவிடர் கழகமும், திராவிடமுன்னேற்றக் கழகமும் என்பதைப் பற்றிதோழர் பொ. வேதாச்சலம் அவர்கள் விரிவுரை ஆற்றினர். தோழர் ஏ. குப்புசாமி அவர்கள் இயக்கஎதிர்காலத்தைப்பற்றிசொற்பொழிவாற்றினர். பெரியோர்களுக்கு தேநீரும், குழந்தைகளுக்கு இனிப்பும வழங்கப்பட்டது. செயலாளர் நன்றி கூற கூட்டம இனிது முடிவுற்றது. (வி-உ)

## தஞ்சாவூர்

தஞ்சை, அக். 17—

திராவிட முன்னேற்றக் கழகம்—தஞ்சை நகரக் கிளையின் துவக்க விழா நேற்று மாலை மிகச்சிறப்பாக நடந்தேறியது.

திலகர் திடலில் மக்கள் வெள்ளம் பரந்து தேங்கிக்கிடந்தது போல், பதினாயிரத்திற்கு மேற்பட்டோர் குழுமியிருந்தனர். முற்போக்கு சிந்தையுடையோர் அனைவர்க்கும் 16-10-49ம் நாள் சிந்தனை விருந்து நாளாகவே காணப்பட்டது என்னலாம். முதியோர், தாய்மார்கள், இளைஞர், மாணவர்கள் முதலிய பல திறப்பட்டோரும் மிக்க ஆர்வத்தோடு வந்து கூடியிருந்தனர் கழகத் தோழர்களுக்கு அந்தத் துவக்க விழா எதிர்கால திராவிடத்திற்கு கால்கோள் விழா செயவதுபோன்றதொரு உற்சாகம் இருந்தது. எங்கு பார்த்தாலும் மாணவர்கள். இளைஞர்கள் ஆகியோர முகத்தில் மலர்ச்சியும் மகிழ்ச்சியுந்தாம் காணப்பட்டன.

மாலை ஆறுமணிக்குக் கூட்டம் துவக்கப்பட்டது. மாலை 6-மணியிலிருந்தே கூட்டம் நடைபெற்ற திலகர் மைதானத்தை நோக்கி மககள் திரள் திரளாக வந்துகொண்டேயிருந்தனர்.

கூட்டத்திற்குத் தோழர் ஏ. கே. வேலன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தோழர் எஸ். இராமதாஸ் அவர்கள் "வளமார எமது திராவிட நடு" என்ற திராவிட நாட்டுப்பண்ணை பாடினர்.

தலைவர் தம் முன்னுரையில் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவசியத்தை விளக்கிப்பேசினார்கள்.

பின்னர், திராவிட முன்னேற்றக்கழகம் அமைக்க வேண்டிய தன் அவசியம் ஏன் ஏற்பட்டது என்பது பற்றியும், எப்படி ஏற்பட்டது என்பது பற்றியும், தலைவா பெரியாரைத் தாங்கள் எதறகாகத் தலைவராகக்கொண்டிருந்தோம் என்பது பற்றியும் அவர் தலைமையை இழந்து விட வேண்டிய அவசியம் அவருடைய பொருந்தாத—ஜனநாயக முறைக்கு மாறுபாடான திருமணத்தால் எங்ஙனம் ஏற்பட்டது எனபது பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னுள்ள பிரச்சினைகள் என்னென்னஎன்பன பற்றியும், அவைகளைத் தீர்த்து வைக்க என்னென்ன முறைகளைக் கையாளப் போகிறது என்பது பற்றியும், மத்திய—மாகாண அரசாங்கநிர்வாகத்தில் எப்படிப பட்ட ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன என்பது பற்றியும், திராவிடப் பெருங்குடி மக்கள திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெருவாரியாகச் சேர்ந்து பாடுபட வேண்டிய அவசியம் பற்றியும், விரிவாகவும், தெளிவாகவும் தோழர்கள் எஸ். எஸ், மணி, என். எஸ். இளங்கோ ஈ. வெ. கி, சம்பத், தோழியர் இராமாமிர்தத்தம்மையார் சொற்பொழிவாற்றினர். கொடுக்கப்பட்ட கேள்வித்தாள் களுக்குக் கேட்டோர் வெட்கித் தலை குனியும் வண்ணம் தகுந்த முறையில் பதலளித்தனர். பிறகு நன்றி கூறக் கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிந்தது.

# மந்திரிப் பதவி வேலை செய்யவா? சுற்றித்திரியவா?

## ஆட்சி புரிய சம்பளமா? கட்சி கூட்டச் சம்பளமா?

சென்னை மந்திரிகள் ஆட்சி அலுவலகத்திலிருந்து வேலை செய்வதைக் காட்டிலும், ஊர் சுற்றிவருதலிலே தனி உற்சாகங் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. மாதம் முப்பது நாட்களில் இருபது நாட்கள் வெளியூர்களில் காலங் கழிப்பதிலும். அதுவும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தேடும் அலுவல்களில் கவனஞ் செலுத்துவதிலேயே இருந்து வருகின்றனர். இவர்கள் பொது மக்களின் சார்பாக ஆட்சி புரிவதாகச் சொல்லி. அதற்காகப் பொதுமக்கள் பணத்தில் சம்பளமும் பெற்றுக் கொண்டு, அரசாங்க வேலையைச் சரிவரக்கூட கவனிக்க நேரமில்லாமல், சொந்தக் கட்சிப் பிரசாரத்துக்கே வெளியூர் செல்லுகிறார்கள் என்றால், காங்கிரஸ் கடசியை நடத்ததான் சர்க்கார் இருக்கிறது என்ற எண்ணம் தோன்றுகிறதே யொழிய, சர்க்காரைப் பொதுப் படையாக நடத்திச்செல்ல காங்கிரஸ் இல்லை என்பது தெளிவாகிறது.

இந்த நாட்டில் காங்கிரஸ் ஆளவந்தார்கள் செய்யும் சுற்றுப் பிரயாணத்தைப் போல, வேறு எந்த நாட்டிலும், எந்த அரசியல் பதவியில் வீற்றிருப் போரும் செயவதாகத் தெரியவில்லை.

எடுத்துக்காட்டாகக் காங்கிரஸ் பிரசாரக்கூட்டங்களிலும். காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டங்களிலும் கலந்துகொள்ளும் பொருட்டு மந்திரி தோழர் எம். பக்தவத்சலம், போட்டிருக்கும் சுற்றுப்பிரயாணத் திட்டத்தைக் கீழே தருகிறோம். அதிலிருந்து கணித்துக் கொள்ளுங்கள 'பொது மக்கள் அரசாங்க' அலுவல் எவ்வளவு தூரம் நடைபெறும் என்று.

அக்டோபர் 22ல் வேலூர் பொதுக் கூட்டம் — 23ல் வேலூர் காங்கிரஸ் ஊழியர் கூட்டம் - 24-ல் குடந்தைப் பொதுக் கூட்டம் — 25ல தஞ்சை கா. ஊழியர்கூட்டம்- 26ல திருச்சிப் பொதுக்கூட்டமும், கா. ஊழியர்கூட்டமும்- 27ல் காரைக்குடிப் பொதுக் கூட்டமும், கா. ஊழியர் கூட்டமும்—28-ல் விருதுநகரப் பொதுக்கூட்டமும், கா. ஊழியர் கூட்டமும்— 29ல் மதுரைப் பொதுக்கூட்டமும், மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமும்—30-ல் மாகாணக் கா. க. கூட்டம்— 31-ல் தூத்துக்குடிப் பொதுக் கூட்டம்—நவம்பர் 1-ல் திருநெலவேலிப் பொதுக் கூட்டமும், கா. ஊழியர்—கூட்டமும் — 2-ல் திண்டுக்கல பொதுக்கூட்டம்—3-ல் கோவைப பொதுக்கூட்டமும், கா. ஊழியர் கூட்டமும்--4ல் ஈரோட்டில்பொதுக் கூட்டம் — 5-ல் சேலத்தில பொதுக் கூட்டமும், கா. ஊழியர் கூட்டமும்—6-ல் கடலூர் பொதுக கூட்டம்— 7-ல் கா. ஊழியர் கூட்டமும்- விழுப்புரம் பொதுக் கூட்டமும—8-ல் செங்கற்பட்டுப் பொதுக் கூட்டம்-9-ல்காஞ்சிபுரம் பொதுக் கூட்டம்.

ஆக 19 நாட்கள் காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்துக்காக ஒரு மந்திரி வெளியூர் செல்கிறார்— போய் வந்தவுடன் எத்தனை யூர்களுக்கு எத்தனை நாட்களுக்குச் செல்லுகிறாரோ! 'மந்திரிக் கழகு சுற்றித்திரிதல்' —காங்கிரஸ் நீதி நூலில் சேர்க்கப்பட்டு விட்டது போலும்!

## சென்னை ஓட்டேரி

சென்னை, அக். 17—

சென்னை நகர ஓட்டேரி உட்கிளையின் திறப்புவிழா 16-10-49 அன்று, தோழர் ஜெ. எஸ். மணி அவர்கள் தலைமையில் கழகக் கட்டடத்தில் நடைபெற்றது. தோழர் வே. த. அர்ச்சுனனர் திறப்புவிழா வாற்றினர். தோழர்கள் சம்பத் குமார், எம். மூர்த்தி, அபீர் ஆகியோர் பேசினர். தோழர் பி. ஜெகநாதம்கொடியேற்றினர்.பிறகு தோழர் ஆர். டி. அரசு நன்றிகூறக் கூட்டம் முடிந்தது. (வி. உ.)

## திருவொற்றியூர்

திருவொற்றியூர், அக். 17—

சென்னை நகர திருவொற்றியூர் உட்கிளையின் துவக்கவிழா 16-10-49-ல் தோழர் எம். வி. இராசு தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் எம். கணபதி கழகத்தைத் துவக்கிவைத்தார். தோழர் திருநாவுக்கரசு கழகக் கொடியை எற்றுவித்தார். தோழர்கள் சி. கண்ணப்பன், தி. கு. சுதர்சன், எஸ். என். ஜெகநாதன், சு. மாசிலாமணி ஆகியோர் பேசினர். செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

## அர்ச்சுனன் நினைவு மன்றம்

நாகர் கோவில், அக். 16—

இந்நகர், வடசேரி அர்ச்சுனன் நினைவு மன்றத்தின் உறுப்பினர்கள் கூட்டம், தோழர் எஸ். ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அதுபொழுது,"இம் மன்றம தலைமைத் திராவிட முன்னேற்றக்கழகத்துடன் இணைந்து கொள்கிறது" என்ற தீர்மானம் நிறைவேறறப்பட்டுக் கீழக்கண்ட செயற்குழுவும தேர்ந்தெடுக்கப் பட்டது.

செயலாளர் :— வி பாவநாசம்; துணைச் செயலாளர்:— எஸ். பாவநாசம்; நிதி உறுப்பினர்:— எம். அந்தோனி; விளம்பர உறுப்பினர்:— எஸ். ராமசசந்திரன். ஏனைய செயற்குழுவினர்:—வி. பாவநாசம், எஸ். பாவநாசம், எம். அந்தோனி, என். குற்றாலலிங்கம், எம். கிருட்டினன், எஸ். நடராசன், ஏ. மணிமொழி, எஸ். ராமச்சந்திரன், எஸ். இளந்திரையன், முத்தையா. [வி-உ]

## திராவிட முன்னேற்ற இளைஞர் கழகம்

தூத்துக்குடி, அக். 11—

இந்நகர் வடக்கூர் பெரியார் திராவிட இளைஞர் கழகத்தின் உறுப்பினர் கூட்டம். 9-10-49 ல் தோழர் பி. சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது பெரியார் திராவிட இளைஞர் கழகம் என்பதை "திராவிட முன்னேற்றஇளைஞர் கழகம்" என மாற்றுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலுமொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

## பல்லபுரம்—சிற்றூர்க் கிளை

பல்லபுரம், அக். 15—

இவ்வூர் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் அருணாசலம் அவர்கள் தலைமையில, 13-10-49 அன்று நடைபெற்றது. அதுபொழுது தி. கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்-பல்லபுரம சிற்றூர்க் கிளை" என மாற்றப்பட்டது. பின்பு ஓர் புதிய செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—ப. ஆ. கணேசன்; துணைச்செயலாளர்:—ப. பெ. அருணாசலம்; பொருள் உறுப்பினர்:—ப. அ. அர்ச்சுனன்; விளம்பர உறுப்பினர்:—ப. சு. ராசரத்தினம். ஏனைய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனத் தோழர் ப. ஆ. கணேசன் (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

## லால்குடி—நகரக் கிளை

லால்குடி, அக். 14—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக்கூட்டம் 2-10-49ல் இவ்வூர் தோழமைக் கழகக் கட்டிடத்தில், தோழர் ஆ. பெ. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபொழுது "திராவிட முன்னேற்றக் கழகம்—லால்குடி நகரக் கிளை" அமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—ப. சிவப்பிரகாசம், நிதி உறுப்பினர்:—எஸ். தங்கராசன்; விளம்பர உறுப்பினர்:—எல். என். பரமசிவம். ஏனைய செயலுறுப்பினர்கள்:—பி. வி. பாலசுப்பிரமணியன், எல். ஆர். ரெத்தினம், எல். ஆர். செல்லையா, எல். கே. செல்லையா, எல். கே. வாதன், எல். ஆர். ராஜகோபால், ஆர். பாலு, எஸ். தருமராசன். ஏ. பி. தர்மலிங்கம், பி. மாணிக்கவேலு, ஷேக் மொய்தீன். எனத் தோழர் எல். என். பரமசிவம் (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

## வாட்டாகுடி—சிற்றூர்க் கிளை

வாட்டாகுடி, அக். 17—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 11-10-49 அன்று, தோழர் கே. முகம்மதலி அவர்கள் இல்லத்தில், தோழர் வே. பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது இவ்வூர் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—வாட்டாகுடி சிற்றூர்க் கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. தோழர் என். கனகசபை அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார். பின்பு ஓர் புதிய செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. முகம்மதலி; துணைச் செயலாளர்:—ஆர். பாலசுப்பிரமணியன்; பொருள் உறுப்பினர்:—ச. வேது; விளம்பர உறுப்பினர்:—பி. வி. கணேசன். ஏனைய செயற்குழுவினர்:-என். கணேசன், எஸ். சிவசங்கரம், எஸ். இராசரத்தினம், வே. பெருமாள், எஸ். முகம்மது முகைய்தீன், சு. செகன்னாதன், இரா. குஞ்சு, சு. சுப்பிரமணியன், ஜி. தில்லைமாணிக்கம், வா. ஒ. முகம்மட் சுருப், ஆர். சாமிநாதன், சு. கணபதி. மேலும் செயற்குழுவினர்களைச் சேர்த்துக் கொள்ளச் செயற்குழுவிற்கு உரிமையளிக்கப்பட்டது. எனத் தோழர் பி. வி. கணேசன் (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

## சென்னை கீழ்ப்பாக்கம்—நகர உட்கிளை

சென்னை, அக். 17—

சென்னை கீழ்ப்பாக்கத்தில் 16-10-49-ல் நடைபெற்ற தி. மு. கழக அமைப்புக் கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்-சென்னை நகர கீழ்ப்பாக்கம் உட்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். ஏ. வேலு; துணைச்செயலாளர் — பிலிப்ராசு; பொருள் உறுப்பினர்-எம். ஜானகிராமன்; விளம்பர உறுப்பினர்—நவரோஜி. எனத் தோழர் எஸ். ஏ. வேலு (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

## தேவபாண்டலம்—சிற்றூர்க்கிளை

தேவபாண்டலம், அக். 16—

15—10—49 அன்று இவ்வூர் தோழர் பி. எஸ். கி. கண்ணன் அவர்கள் இல்லத்தில், தோழர் டி. பி. கேசவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—தேவபாண்டலம சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுப் புதிய செயற் குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:-பி. எஸ். அன்பரசு; பொருள் உறுப்பினர்-என். சுசசியப்பன். ஏனைய செயலுறுப்பினர்கள்-டி. பி. கேசவன், வி. பெரியசாமி, பி. வி. வாசன், பி. வி. மாணிக்கம், எஸ். நாராயணன், பி. நாராயணன், ஏ. ஆர். சுந்தரம், எம். ரங்கசாமி, அப்துல்சுபான். மேலும் சிலரைச் சேர்த்துக்கொள்ள உரிமையளிக்கப்பட்டது. பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. எனத் தோழர் பி. எஸ். அன்பரசு (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

## கரூர்—நகரக்கிளை

கரூர், அக். 16—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம 13—10—49 இரவு இவ்வூர் பெரியார் உணவு விடுதி மேல் மாடியில், தோழர் கே. ஆர். இராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபொழுது "திராவிட முன்னேற்றக் கழகம்—கரூர் நகர கிளை" நிறுவப்பட்டுப் புதிய செயற்குழுவொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்கள்:— எஸ். வையாபுரி; வி. ராமசாமி (நகர் மன்ற உறுப்பினர்); பொருள் உறுப்பினர்:—எஸ். நல்லுசாமி; விளம்பர உறுப்பினர்:— ஆர். முருகேசன். மற்றைய செயலுறுப்பினர்கள்:—ஆர். சுப்பிரமணியன், சி. கோவிந்தராஜன், எஸ். கிருஷ்ணன், எஸ். பொன்னுசாமி, வி. ராமசாமி. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றதெனத் தோழர் ஆர். முருகேசன் (வி. உறுப்பினர்) அறிவிக்கிறார்.

* * *

## திருச்சி மார்சர்பேட்டை ரோடு—நகர உட்கிளை

திருச்சி, அக். 17—

16—10—49 அன்று மார்சர்பேட்டை ரோடுத் தோழர் கு. துரைசாமி அவர்கள் இல்லத்தில், தோழர் க. அருணன் தலைமையின் கீழ் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம் — திருச்சி நகர மார்சர்பேட்டை ரோடு உட்கிளை" நிறுவப்பட்டுப் புதிய செயலுறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— கு. துரைசாமி; துணைச்செயலாளர்:— மரியானந்தம்; நிதி உறுப்பினர்:—கா. ஜான் டேவிட்; விளம்பர உறுப்பினர்:—சி. ராமசாமி. இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் கு. துரைசாமி (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

## குமரமங்கலம்—சிற்றூர்க்கிளை

குமாரமங்கலம், அக். 17—

இவ்வூர் திராவிடர் கழக செயற்குழுவினர்கள் கூட்டம், 13-10-49 அன்று இவ்வூர் பெரிய நந்தவனத்தில் கூடியது. பெருவாரியான உறுப்பினர்கள் வந்திருந்தனர். அப்போது இவ்வூர் தி. கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—குமாரமங்கலம் சிற்றூர்க் கிளை" என மாற்றியமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— ப. இரங்கசாமி; துணைச்செயலாளர்:— கே. கே. முத்து; பொருள் உறுப்பினர்:—கே. திராவிடமுத்து; விளம்பர உறுப்பினர்:— ப. முனியப்பன். ஏனைய செயலுறுப்பினர்கள்:—தி. ராமசாமி, ப. செங்கோடன், கு. அப்பாவு, பி. கருப்பண்ணன், ந. அம்பாவு, செ. செம்மலை, கே. கே. கந்தசாமி, கு. சின்னு, எஸ். கந்தசாமி, மு. ஆறுமுகம, கே. கே. சின்னு. இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. என விளம்பர உறுப்பினர் தீட்டுகிறார்.

* * *

## இராமநாதபுரம்—நகரக்கிளை

இராமநாதபுரம், அக். 17—

இவ்வூர் தோழர் இராமதாசன் அவர்கள் இல்லத்தில், 16—10—49 அன்று ஆர்வமுள்ளத் தோழர்கள் கூடி "திராவிட முன்னேற்றக் கழகம்—இராமநாதபுரம் நகர கிளை" நிறுவினர். ஓர் செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:—ர. பழனிசாமி; துணைச்செயலாளர்:— ஆ. ராமசாமி; நிதிஉறுப்பினர்:—மு. பழனிசாமி. எனத் தோழர் ர. பழனிசாமி (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

## புதூர் உத்தமனூர்-சிற்றூர்க்கிளை

புதூர் உத்தமனூர், அக். 16—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம தோழர் மு. க. து. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—புதூர் உத்தமனூர்—சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டுப் புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- ப. வே. ந. தங்கராசு; துணைச்செயலாளர்:- எம். மேடியாஅனந்தர்; நிதி உறுப்பினர்:- மு. நாதப்புடையார்; விளம்பர உறுப்பினர்:- மு. க. து. நடராசன்.

ஏனைய செயற்குழுவினர்:- ரா. து. பொன்னுசாமி, மோ. ந. முத்துசாமி, ஆ. நடராசன், அ. க. நடேசன், தெ. ஆ. சவரிமுத்து என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

## வாணியம்பாடி—நகரக்கிளை

வாணியம்பாடி, அக். 17—

இந்நகர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் ப. செயராம் அவர்கள் தலைமையில், தோழர் டி. ஏ. ஆறுமுகம் அவர்கள் இல்லத்தில் 14—10—49-ல் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—வாணியம்பாடி நகரக் கிளை" நிறுவப்பட்டு, புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-எம் பி. வடிவேலு; துணைச்செயலாளர்:— எம். டி. ரத்தினம்; பொருள் உறுப்பினர்:— டி. ஏ. ஆறுமுகம்; விளம்பர உறுப்பினர்:— வி. என். தத்தப்பன். ஏனைய செயற்குழுவினர்கள்:- ஆர். திருஞானம், மு. நாராயணசாமி, மு. வெங்கடாசலம், வீ. கணேசன், எம். கண்ணன், என். வேலாயுதம், எம். மஜீத் சாயபு, கா. சி. முனுசாமி, இ. ரா. பரமசிவன், எஸ். எம். முருகேசன். பின்பு தோழர் டி. ஏ. ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் முடிந்தது. என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

## போளூர்—நகரக்கிளை

போளூர், அக். 17—

தோழர் வி. கே. நாராயணன் அவர்கள் தலைமையில், 16-10-49 ல் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்-போளூர் நகரக்கிளை" நிறுவப்பட்டது. கூட்டத்திற்கு 50 க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

செயலாளர்:— கோ. கிருட்டினசாமி; துணைச் செயலாளர்:— இல. கோதண்டன்; நிதி உறுப்பினர்:—வி. கே. நாராயணசாமி; விளம்பர உறுப்பினர்:— வெ. ம. ரங்கநாதன். ஏனைய செயலுறுப்பினர்கள்:- இர. சம்பந்தி, இ. அப்துல் ரவூப், ஜி. சிட்டிபாபு, வி. அர்ச்சுணன், கே. ஏசான்சாயபு, எம். ஏ. ரஹ்மான், வி. மாணிக்கம், ஏ. கிருட்டினன், எம். ஏ. முகம்மது இஸ்மாயில், பி. நடேசன், கோ. குப்புசாமி. பின்பு செயலாளர் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. மீண்டும் செயலுறுப்பினர்கள் கூட்டம் ஒன்று கூடியது. கூட்டம் "திராவிடநாட்டுப் பண்"னுடன் துவங்கியது. பிறகு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

## மதுரை சந்தைப்பேட்டை—நகர உட்கிளை

மதுரை, அக். 16—

இவ்வூர் அண்ணாத்துரை இலவச வாசகசாலையில், தி. க. உறுப்பினர்களின் கூட்டம் 9-10-49ல் கூடியது. அதுசமயம், இவ்வூர் திராவிடர் கழகம் 'திராவிட முன்னேற்றக்கழகம்—மதுரை நகர சந்தைப்பேட்டை உட்கிளை" என மாற்றியமைக்கப்பட்டதாகத் தீர்மானிக்கப்பட்டுப் புதிய செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:—கே. எஸ். ராஜமான்; துணைச்செயலாளர்:—சி. பாக்கியம்; பொருள் உறுப்பினர்:—டி. வி. தங்கராஜ்; விளம்பர உறுப்பினர்:—எஸ். முனியப்பன். ஏனைய செயற்குழுவினர்:—எஸ். பாண்டியன், வி. குருசாமி, வி. கே. சங்கரலிங்கம், மதுரை மன்னன், ச. வயிரவன், வி. துரைசாமி, டி. இளந்தாடி. எனச் செயலாளர் தீட்டுகிறார்.

* * *

## பம்பாய்—நகரக கிளை

பம்பாய், அக். 17—

"திராவிட முன்னேற்றக் கழகம—பம்பாய் நகரக் கிளை" 16-10-49 அன்று பம்பாய் பேன்ட்ஸ்டேன்ட் மைதானத்தில் நடந்த கூட்டத்தில் நிறுவப்பட்டது. தோழர் எம். எஸ். கண்ணையா அவர்கள், கூட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்றுப் பேசினார். பிறகு தோழர் துரைசாமி அவர்களால், வெளியிடப்படும் 'முன்னேற்றம்' எனும் கைப்பிரதி ஆரம்பித்துவைக்கப்பட்டது. பின்னர் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— கே. கே. ராமநாதன்; பொருள் உறுப்பினர்கள்:—கே. பி. வேலாயுதம், எஸ். கே. கண்ணன்; விளம்பர உறுப்பினர்:— டி. எஸ். விஸ்வநாதன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—கே. கே. ராமநாதன், எம். எஸ். கண்ணையா, கே. பி. வேலாயுதம, எஸ். கே. கண்ணன், டி. எஸ். விஸ்வநாதன், வி. ராமையா, எம். எஸ். குறுஞ்செழியன், கே. டி. விடிவெள்ளி, பி. எஸ். செல்லையா, எம். எல். பழனிநாதன், ஓ. எஸ். சுடலைமுத்து, வி. வேலுசாமி, பி. சொரிமுத்து, எம். பாலகிருஷ்ணன். இறுதியாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுத், தலைவர் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. எனத் தோழர் டி. எஸ். விஸ்வநாதம் (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

## கல்லல்—சிற்றூர்க் கிளை

கல்லல், அக். 18—

இராமநாதபுரம் மாவட்டம், கல்லல் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 16—10—49 அன்று தோழர் எஸ். மகாதேவன் அவர்கள் இல்லத்தில், தோழர் கே. எஸ். திருப்பதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது காரைக்குடித் தோழர் இராம. சுப்பையா அவர்கள் "புதுக் கழகம் காணும் அவசியம்" என்பது பற்றிப் பேசினார். தோழர் என். இலக்குமணன் அவர்கள் "அண்ணாவின் அறிக்கையை"ப் படித்து அழகுபட விளக்கினார். பிறகு "திராவிட முன்னேற்றக் கழகம்—கல்லல்சிற்றூர்க் கிளை" நிறுவப்பட்டு செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-என். இலக்குமணன் பொருள் உறுப்பினர்—என். எஸ். எம். இராமசாமி, விளம்பர உறுப்பினர்—எஸ். மகாதேவன். ஏனைய செயலுறுப்பினர்கள்-வி. ஏ. பழனியப்பன், கே. எம். நாச்சியப்பன், எம். சோமசுந்தரம், கே. எஸ். திருப்பதி, கி. ஆ. பெ. தாஸ். பின்னர் சிலத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. எனத் தோழர் எஸ். மகாதேவன் (வி. உறுப்பினர்) அறிவிக்கிறார்.

* * *

## பனையக்குடி—சிற்றூர்க்கிளை

பனையக்குடி, அக். 18—

மாயவரம் தாலுகா பனையக்குடியில், தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 16—10—49ல் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—பனையக்குடி சிற்றூர்க் கிளை"யைத் தற்காலிகமாக, இளந்தோப்புத் தோழர் இ. என். இளம்வழுதி அவர்கள் இல்லத்தில் நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டுச், செயற்குழுவொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—இ. என். இளம்வழுதி, துணைச் செயலாளர்:—ப. இர. சம்பந்தன், பொருள் உறுப்பினர்-ப. ராமசாமி, விளம்பர உறுப்பினர்-ப. சி. முருகேசன். எனத் தோழர் ப. சி. முருகேசன் (வி. உறுப்பினர்) அறிவிக்கிறார்.

* * *

## செல்வராசன் கோட்டை—சிற்றூர்க்கிளை

செல்வராசன் கோட்டை, அக். 18—

இராமநாதபுரம் மாவட்டம, செல்வராசன் கோட்டை தி. மு. க. அமைப்புக் கூட்டம் 16-10-49-ல் தோழர் கரு. தியாகராஜன் அவர்கள் இல்லத்தில், தோழர் இராம. சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—செல்வராசன் கோட்டை சிற்றூர்க் கிளை" அமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:-கரு. தியாகராஜன்; பொருள் உறுப்பினர்:- புரட்சிதாசன்; விளம்பர உறுப்பினர்:— அ. சாமிநாதன். ஏனைய செயலுறுப்பினர்கள்:— பொ. சுந்தரம், துரை சேதுசாமி, செல்வநாதன். மேலும் சில தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. எனச் செயலாளர் தீட்டுகிறார்.

* * *

## வில்லிப்பாக்கம்-சிற்றூர்க்கிளை

வில்லிப்பாக்கம், அக். 18—

வில்லிப்பாக்கம (குணம்பேடு) திராவிடர் கழக உறுப்பினர்கள் 10—10—49ல் கூடி, இவ்வூர் தி. கழகத்தைக் கலைத்துவிட்டுத் "திராவிட முன்னேற்றக் கழகம்-வில்லிப்பாக்கம சிற்றூர்க்கிளை" அமைத்தனர். பின்பு புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- க. தேசிங்கு; துணைச் செயலாளர்:— குப்புசாமி; பொருள் உறுப்பினர்:— வி. வெ. பாபு. மற்ற செயலுறுப்பினர்கள்:- க. முத்து, க. நடராசன், கு. சுப்பராயன், மு. ஆறுமுகம, து. ஆறுமுகம், ந. செல்வராசன், மு. தியாகராசன், சா. இராசமாணிக்கம், ப. வில்லவன்கோதை, ச. லோகநாதன். எனத் தோழர் வி. வெ. பாபு (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Manickam Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.